

# காய்கறி மருத்துவம்

நம் உணவில் இடம்பெறும் காய்கறிகளால் மருத்துவ குணம் வாய்ந்த சத்துகளும் கிடைக்கின்றன. அவை என்னென்ன தெரியுமா?

**தக்காளி:** நோய் எதிர்ப்பு சக்தியைத் தூண்டும். வயிறு மற்றும் சுரப்பிகளில் புற்றுநோயை தடுக்கும்.

**உலர் திராட்சை:** ரத்தத்தில் பிராண வாயுவை அதிகப்படுத்தும். உடம்பிலுள்ள கழிவுகளை அடியோடு அகற்றும். பெண்களுக்கு மாதவிடாய் நேரத்தில் உண்டாகும் உடல் உபாதையை குறைக்கும்.

**எலுமிச்சை:** கண் பார்வை பிரகாசமாகும். புற்றுநோயை தடுக்கும்.

**வெங்காயம்:** உடல் சூட்டை தணிக்கும். புற்றுநோயை கட்டுப்படுத்தும்.

**கீரை:** செரிமானத்துக்கு நல்லது. கண் பார்வை பிரகாசமாகும். முதுமையை தள்ளிப்போடும்.

**பூண்டு:** ரத்தத்தில் கெட்ட கொழுப்பின் அளவை குறைக்கும். ரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தும். நாளமில்லா சுரப்பிகள் மற்றும் வயிற்றில் புற்றுநோயை கட்டுப்படுத்தும்.

**பாலாடை:** தோல் நோய், ஒவ்வாமையை (அலர்ஜி) கட்டுப்படுத்தும்.





# நட்சத்திர பங்களா

காஞ்சனா ஜெயதிலகர்

## 1

"அதோ அந்தப் பச்சையில மஞ்சள் 'பார்டர்' போட்டதை எடுங்க."

கடைச் சிப்பந்தி சளைக்காமல் எடுத்துப் போட்ட பாவாடைகள் குன்றாய் குவிந்திருந்தன.

மறுபடி அத்தனையையும் கிளறி கலைத்து, அரக்கில் தங்கக் கரையிட்ட ஒன்றைத் தேர்ந்தெடுத்தாள் பரணி.

அதற்கேற்ற 'டிஷ்யு' ரவிக்கைத் துணி தேர்ந்தெடுக்க மேலும் கால் மணி நேரம். எண்ணூற்று சொச்சத்திற்கு 'பில்' வந்தது.

"என்னம்மா... மொத்த பர்சேஸும் கால் மணி நேரத்துல

முடிப்பீங்க. இன்னைக்கென்ன?" –கடையின் மேற்பார்வையாளர் விசாரித்தார்.

"வழக்கமாய் வாங்கற துணியெல்லாம் நான் தைச்சு விக்கறதுக்கு. இது என் அக்கா பொண்ணுக்கு."

"ஆகா? எத்தனை வயசு குட்டி?"

"அஞ்சு முடியுது. இதுதான் அதுக்கு எடுக்கற முதல் பட்டு."

"பொங்கிப் பெருகட்டும்"– கவுண்டரிலிருந்து பார்சலை வாங்கி, அவரே துணிப் பையிலிட்டு கண்களில் ஒற்றி நீட்டினார்.

"நன்றி... வரேன்."

கடையின் அருகே இருந்த புது மண்டபத்திற்குள் போனாள். அவள் தைத்து விற்கும் அலங்கார ரவிக்கைக்கான பாசி, மணி, கண்ணாடி, குஞ்சங்கள் இங்கு மொத்த விலைக்குக் கிடைக்கும். நூலும், பித்தான்களுமாய் வாங்கி முடிக்க இரண்டு மணி நேரமானது.

மதியம் முழுக்க மதுரை வெயிலில் அலைந்த சோர்வு. குடித்த ஒரு சாத்துக்குடி 'ஜூஸ்' எப்போதோ வியர்வையாய் கரைந்திருக்க வேண்டும்.

நல்ல பசி.

ரோட்டோர இட்லி, சட்னி போதும்.

மதுரை நடைபாதையின் மல்லிப்பூ இட்லி, காரச்சட்னி பிரபலம். ஆனால், நாகரீகமான பெண் ஒருத்தி ரோட்டோரம் நின்று சாப்பிட முடியாது. பலர் நின்று பார்த்துப் போவார்கள்.

எனவே, ஓட்டலுக்குள் நுழைந்தாள்.

திருப்தியாய் சாப்பிட்டால்தான் வாங்கிய பொருட்களோடு சைக்கிளை மிதிக்க முடியும்– அதுவும் எட்டு கிலோ மீட்டர்...!

சாலை நெரிசலைத் தாண்டி மதுரை– திண்டுக்கல் சாலையைப் பிடிப்பதற்குள் வயிற்றுக்குள் ஈயப்பட்ட அத்தனையும் ஆவியாகி விட்டது போன்ற ஆயாசம். ஆனால், இதற்கே அசந்தால்



முடியாது.

கோரிப்பாளைய சந்தையில் ஒரு கிலோ உருளைக்கிழங்கு வாங்கிக்கொண்டாள். இன்று அனு குட்டி மசாலா தோசை கேட்டிருந்தது. தினம் 'நேயர் விருப்பம்' போல அதன் விருப்பப்படிதான் சமையல்.

'லொங்கு லொங்கெ'ன்று சொச்ச தூரத்தை மிதித்தால்தான் பள்ளியிலிருந்து அனு திரும்புவதற்குள் இவள் வீட்டு வாசலைத் திறந்து வைக்கலாம்.

'சித்தி' என்று அந்தக் குட்டி கட்டி முத்தமிட, இத்தனை ஆயாசமும் பாயாசமாகிப் போகும்!

மல்லிகை மொட்டுகளைப் பூப்பறிக்கப் பழகிய கைகள் எப்படி 'விடு விடு'வென பறிக்குமோ அதேபோல இவளது மொத்த குடும்பத்தையும் விதியின் கைகள் கொய்துபோன பிறகு மிஞ்சின ஒரே மொட்டு அனுதான்.

இவள் பன்னீர் வார்த்து பாதுகாக்கும் சின்ன பூ.

இன்றும்கூட புது மண்டபத்துள் நுழைந்தபோது அக்காவின் ஞாபகம் வந்தது. தன் வளைகாப்புக்கு விதவிதமாய் வளையல்களைத் தானே தேர்ந்தெடுக்க வந்திருந்த பத்மாக்கா– இதே அனு அப்போது வயிற்றினுள்...

பத்மா இவளைவிட ஏழு வயது மூப்பு. அப்பாவின் ஜாடை போலும்.

அகன்ற மாநிற முகம். சதா அலையிடும் சிரிப்பு.

பரணி அப்படியே அம்மாவின் நகல்– பனித்துளியுடன் மஞ்சள் கலந்த சருமம். திறமையான ஓவியன், பிரபல பத்திரிகையின் அட்டைப் படத்திற்காக வரையும் பெண் போன்ற மிக அழகிய முகம்.

பார்க்கும் யாரும் அக்கா– தங்கை என யூகிக்க முடியாது.

ஆனால், பாசம் காட்டிக் கொடுத்துவிடும்.

'என்னா பிரியம், எத்தனை ஒத்துமை. சுத்திப் போடு சுப்பு' என்று பலர் மெச்சியதுண்டு.

பரணி பிறந்த ஒரு வருடத்திற்குள் அப்பா உலகைவிட்டுப் போயாயிற்று.

மூளிபட்ட குடும்பத்தை அம்மா தன் அன்பால் நிரப்பினாள்.

ஆனால், வெறும் அன்பு வயிறுகளை நிரப்புமா?

கடவுள் அதற்கும் ஒரு வழி வைத்திருந்தார்.

அப்பா இருக்கும்போதே அம்மா துணி தைப்பதுண்டு.

விரும்பிக் கேட்பவர்களுக்குத் தைத்துத் தருவதுண்டு. அப்படிப் பழக்கமானவர்தான் நட்சத்திரம்மா.

பரணி ஐந்தாறு வயதிருக்கும்போது அவர்களிடம் கேட்ட நினைப்பு.

'ஏம்மா... உங்க பேரு நட்சத்திரமா?'

'அந்தக் காலத்துல நட்சத்திரங்களைக் கொண்டுதான் திக்குதிசை அறிவாங்களாம். நட்சத்திரம் வழிகாட்டும். நானும் தேவைப்பட்டவங்களுக்கு வழிகாட்டணும்னு எங்க தாத்தா ஆசையா வச்ச பேரு அது?'.

ஆனால், அனைவரும் அவரை அழைப்பது பெரியம்மா என்றுதான். அவருக்கு இரு பெண்கள். விதவிதமாய் தைத்துப் போட்டு அழகு பார்ப்பார்.

'கச்சிதமாய் தைக்கிறே சுப்பு. ஒரு தையல் கடை போட்டுறலாம் நீ– கூட்டம் மொய்க்கும்.'

'எங்கம்மா நேரம்இருக்கு? இவர் 'பாக்டரி' பக்கம்ங்கறதால மதியச் சாப்பாட்டுக்கு வீடு வந்திடுவார். சூடாய் சமைச்சுப் பறிமாறுவேன். சாயங்காலம் பத்மாக்குப் பாடம், பாட்டுன்னு கழியும். இடையிடையே கிடைச்ச நேரத்தில தையல்.'

ஆனால்,'யூனியன் தகராறு பெரிதாகி– அதில் தன் அப்பாவி



கணவன் கொலையுண்ட பிறகு வழிபுரியாமல் சுப்பு தடுமாறி நின்ற நேரம்– நட்சத்திரம்மாதான் வழிகாட்டினார்.

அம்மாவின் அழகும் சத்ரு. வேண்டாத வண்டுகள் பல மொய்க்கலாயின.

"பேசாம கிளம்பு சுப்பு. எங்க 'அவுட் ஹவுஸி'லே தங்கு."

இவர்கள் தங்கியிருந்தது 'பாக்டரி'க்குச் சொந்தமான வீடு. வேண்டாத சீண்டல்கள். எனவே, அம்மா உடனே சம்மதித்தாயிற்று– மூட்டையைக் கட்டினார்கள்.

"உந்தம்பி வந்தான்னு கேள்விப்பட்டேன்."

'வந்தவன்... சம்பிரதாயம்னு என்னைப் பாத்து சொல்லிக்காமலேயே போயிட்டாம்மா. யார நோக? அவனுக்கும் மூணு பிள்ளைங்க.'

'வீட்டுக்கு வெள்ளையடிக்க ஆளுங்களுக்குச் சொல்லி விட்டுட்டேன்– நீ மூட்டையைச் சீக்கிரமாய்க் கட்டு.'

வேறு வழியின்றி, வேறு போக்கிடமின்றி அக்குடும்பம் வந்து சேர்ந்ததுதான் இந்த நட்சத்திர பங்களா!

ஆனால், வேறு வழி இல்லாததும் நல்லதுக்கென்பதும் பிறகு புரிந்தது.

பிக்கு பிடுங்கலின்றி அம்மா தைரியமாய், சுயமாய் சிந்தித்து வாழ கற்றுக்கொண்டது அங்குதான்.

தானே மதுரை போய் துணிகளைத் தேர்ந்தெடுத்து வாங்க ஆரம்பித்தாள்.

ஓரிரு பெண்களைத் தையலில் உதவிக்கு அமர்த்த, வியாபாரிகளைச் சந்தித்து உடைகளை விற்க என்று தேறினாள்.

அக்காவைக் கல்லூரி விழா ஒன்றில் பார்த்து விரும்பி வந்து பெண் கேட்ட அத்தானும் நல்ல மாதிரி.

அவருக்கு மதுரை நிறுவனம் ஒன்றில் நிறைந்த சம்பளத்துடன்

நிலையான வேலை.

உயிர்தான் நீடித்து நிலைக்கவில்லை!

இவர்கள் வீட்டுக்குப் பக்கத்திலேயே குடித்தனம் வைத்தார். தினம் மதுரைக்கு பஸ்ஸில் போய் வருவதுண்டு.

'என்ன மாப்பிள்ளை... எட்டு எட்டு பதினாறு கல்லு தினமும் அலைச்சல். உங்க ஆபீஸ் பக்கத்திலேயே வீடு பாருங்களேன்.'

'இல்ல அத்தை. ஆபீஸ் டவுன் ஹால் ரோடை அடுத்து நெரிசலான பகுதி. தூசும், சத்தமும் ஜாஸ்தி. சுத்துவட்டாரமே அப்படித்தான். வாடகையும் அதிகம். இங்கே பத்மாவுக்கு நீங்க துணை- உங்க எல்லாருக்கும் நாந்துணைன்னு பாந்தமாயிருக்கோம்...' என்றவர், தன் பிஞ்சு மகளையும் துணையின்றி விட்டுப் போயாயிற்று விபத்து ஒன்றில்.

அத்தான் சிநேகிதர் வீட்டு விசேஷத்திற்காய் கிளம்பிய தம்பதியர் இருவரும் ஒன்றாய் காலி.

குழந்தை அனுவிற்கு அச்சமயம் மார்ச்சளி.

'ஸ்கூட்டரிலே ஐப்பசி மாசம் இவ எதுக்கு? -மழை வேற வரும் போலிருக்கு. உங்கக்கூட நிம்மதியா இருக்கட்டும் அனு...' -என்று மகளை இவளிடம் ஒப்படைத்துப் போனவர்கள் ஒரேயடியாய் போயாயிற்று.

சரச்சாலையில் நேர்ந்த விபத்து. இன்னும்கூட 'விர்'ரென்று விமானமாய் சாலையில் பாயும் வாகனங்களைக் கண்டால் பரணிக்கு 'திக்'கெனும்.

'ஏனிந்த வேகம்?' என்று பதறும்.

அதோ அந்த கரும் பச்சை காரும்கூட பேய்த்தனமாய் வருகிறது. அப்படி என்ன அவசரமோ?

அவள் யோசிக்கும்போதே அது வேகத்தைச் சற்றே குறைத்து கிளைச் சாலைக்குள் வளைந்தது.

ஆச்சரியமாய்ப் பார்த்தாள்.



அதுதான் இவளும் திரும்பவேண்டிய பாதை.

அரை பர்லாங்கிற்குள் பங்களா வரும்.

வேறு வீடுகள் அற்ற பகுதி அது.

தவறாய் திரும்பிவிட்டார்களோ?

இப்போது ஐயா, பெரியம்மா கூட இல்லையே?

அவர்களைப் பற்றி நினைவு வர, கண்களில் தானாய் நீர்க்குளம் கட்டியது.

## 2

மூத்த மகள், மருமகனின் மரணம் அம்மாவைப் பலக்க அடித்துவிட்டது.

புருஷனின் இழப்பைப் பிள்ளைகளுக்காய் தாங்கிக் கொண்டாள். அப்போது வயதும் சாதகம்.

உடலும், உள்ளமும் மேலும் தளர்ந்த நிலையில் இத்தனை வெறியான அடியை அம்மாவால் தாங்கமுடியவில்லை.

கவலைதான் உடலை அரித்ததோ... உடம்பு நோயைக் கவலையினால் அலட்சியம் பண்ணினாளோ- ஆறாம் மாசம் அம்மா படுத்த படுக்கையில்.

பிறகு, உடம்பு ஓரளவு தேறினாலும்... முன்பு போலில்லை. பள்ளிக்கூடம் போன நேரம் தவிர பரணி சமைத்தாள், துவைத்தாள், தைத்தாள்.

குழந்தையை அம்மா பார்த்துக் கொள்ள முடிந்தது. அனு பள்ளிக்குப் போக ஆரம்பித்த பிறகு அம்மாவின் நிலை மேலும் மோசமானது. இருந்த சேமிப்பை முழுக்கக் கரைத்து வைத்தியம் பார்த்தும் பயனில்லை.

தற்சமயம் அம்மா கற்றுத் தந்த கைத்தொழில்தான் துணை.

ஆனால், பெரியம்மா இல்லாவிட்டால் தடுமாற்றம் அதிகமாய் படுத்தியிருக்கும். அவர்களது அன்பு பெரும் பலம்.

அம்மா மறைந்த முதல் மாதம் இவர்கள் படுக்கை பங்களாவில்தான்.

'இனி அங்கே எதுக்கம்மா பரணி தனியே இருக்கணும்? எங்கூட இரு...' என்றார் கருணையுடன்.

இவளுக்கும் மறுபேச்சிற்கான திராணி இல்லை.

சோகம் அவள் சக்தியை எல்லாம் பிரிந்து உதறியிருந்தது.

வேளைக்கு வற்புறுத்தி சாப்பிடச் செய்து,

'எனக்காக காலார நடந்தா சவுகரியம் பரணி– துணைக்கு வர்றியா?' என்று இவளை வெளியே கிளப்பி, "உங்கம்மா சாம்பலாயிட்டதாவா நினைக்கற? தினம் மூப்படைஞ்சு அழியற உடம்பு மட்டுந்தான் சாம்பல் ஆயிடுச்சு. ஆன்மா... அது தன்னைப் படைச்சவர்கிட்ட போயாச்சு. பசி, துக்கம், கண்ணீர் இல்லாத சொர்க்கத்தில் இருப்பா சுப்பு. உம்மனசைத் தேத்த நான் சொல்லலை. இதுதான் உண்மை...' –இதமாய் பேசினார்.

'இனி அனுவுக்கு நீதானே எல்லாம்?' என்று அதட்டுவார். அதுவரை சிலையாய் இருந்தவள் இதற்கு மட்டும் தலையசைப்பாள்.

'ஆம்...மா.'

'தோ பாரேன், அனு உனக்குன்னு வரைஞ்ச படம். இதுதான் நீயாம். இது திலைக்கும் நீ வாசல்ல போடற கோலமாம்...'

குச்சிக் கை– கால்களுடன் 'இவள்' உச்சிமுடி சிலுப்பியபடி நிற்க, பெரும் வட்டங்களின் கிறுக்கலாய் 'கோலம்' –இவளைவிடப் பெரியதாய்!

கண்ணீர் புன்னகையுடன் குட்டி அனுவை அணைத்துக் கொண்டாள்.

மெதுவாய் சிரித்தாள்.



பிறகு மெல்ல தேறினாள்.

'கிளம்பு பரணி, ஐயா மதுரைக்குப் போறாங்க. நாமும் போயிட்டு வரலாம்.'

'தையல் வேலை இருக்கேம்மா.'

'அதெங்க ஓடிப்போகும்? கால் இருக்கற நாமதான் அங்க இங்க சாடிட்டு வரணும். கிளம்பு. இன்னும் நாலு பண்டல் துணி, பட்டன் வாங்கணும்னியே... அதையும் முடிச்சிடலாம்."

'அது... அதுக்குப் போதுமான காசு இன்னும் சேரலம்மா.'

'எங்கிட்ட இருக்குதே. வர்றது ஜூன் மாதம். 'யூனிபார்ம்' தைக்கிற வேலை தாராளமாய் வரும். அப்ப இந்தக் கடனைத் தீர்த்திடு. பிறகு இந்த 'ரெடிமேடு' ரவிக்கை தைக்க நேரம் இருக்காதே?'

இப்படி பெரியம்மா தொழிலும் உதவ, சீக்கிரமே சுதாரித்துக் கொண்டாள் பரணி.

வெறும் ரவிக்கைக்கே முப்பது ரூவா கூலி. நீ முதுகிலே,
படிக்கட்டு, ஜன்னல், முத்துன்னு நாலு தினுசாய் தைக்கிறே
பெண்ணே. தவிர, மூச்சிரைக்க ஓடிப்போய் துணியும், நூலும்
வாங்கற அலைச்சல் வேற– குறைஞ்சது ஐம்பதேனும் வாங்கு.
வேலை ஜாஸ்தின்னா எழுவது.'

'இப்போ மொத்தமாய் வந்து வாங்கிக்கறாங்கம்மா. விலையைக்
கூட்டினா... சரக்கு வேண்டாம்னு சொல்லிட்டா...?'

'அவங்க அடிக்கிற லாபத்தில அஞ்சு, பத்து– அதுவும் உனக்குச் சேரவேண்டியதை அவன் ஏன் தரமாட்டான்? தாராளமாத் தரேன்னாச்சு...'

'எப்போ... எப்படி பெரியம்மா?'

'ஐயாவை விட்டுப் பேசச் சொன்னேன். சிறு பொண்ணு–
உன்னை ஏய்ச்சிடுவாங்க– வியாபாரிங்க தடாலடியாப்
பேசுவாங்க. நம்ம ஐயா சொன்னதும், 'சரிய்யா'ன்னு தலையை

உருட்டிட்டாங்க. இனி 'பில்'லைக் கூட்டியே போடு.'

சகாயம் ஐயா, அம்மாவிற்கு ஏற்றவர்.

சாந்தமான சிரிப்பும், அமர்த்தலமான பேச்சுமாக...

பெண்டாட்டியை தலை மேல் வைத்துக் கொண்டாடும் புருஷன்.

'ரெண்டு பெண்களையும் கட்டிக் கொடுத்தாச்சு. இனி சீராட்டி பாராட்ட இவமட்டுந்தானே எனக்கு' என்பார்.

இவர்கள் இருவரின் துணை இருக்கும் துணிவில் கையை சற்று எட்டியே போட்டு நீந்தினாள் இவள். மறுபடி ஓரிரு பெண்களை உதவிக்கு நியமித்தாள்.

இரட்டைத் தையலோடு சாயம் போகாத உள்பாவாடைகள், 'நைட்டி'கள் என்று விஸ்தரித்தது தொழில்.

ஆனால், ஒரு வாரம் இவள் கை ஓய்ந்தாலும்... வியாபாரம் தளர்ந்துவிடும் அபாயம் இருந்தது. நிலையான வருமானமில்லை.

இதில் வயிற்றுப்பாட்டைச் சமாளிக்கலாம். ஆனால், அனுவின் படிப்பு- திருமணம்?

அதிர்ச்சிகளை விழுங்கி, வாழ்வைச் சீராக்கி, 'அவள் எதிர்காலம் என்ன? எப்படி?' என்று ஆராய்ந்த வேளையில் அடுத்த அடி விழுந்தது.

சகாயம் ஐயா இறந்து போனார்.

பெரியம்மாவைத் தேற்ற வேண்டுமே என்பதைத் தவிர வேறு சிந்தனை இல்லாமல் போனது.

நான்காம் நாள்- வெளிநாட்டிலிருந்த பெரியம்மாவின் இரு மகள்களும் வந்து சேர்ந்தனர்.

ஓரிரு ஆண்டுகளுக்கு ஒருமுறை இருவரும் மாறி மாறி வந்து போவார்கள். மூத்தவள் பமீலா. இளையவள் நிர்மலா.

இருவருக்கும் ஏற்காடு பள்ளியிலும், பிறகு நகர்ப்புற



கல்லூரிகளிலும் படிப்பு. விடுமுறைகளில் அவர்களோடு பழகினாலும் வயது- அந்தஸ்து இடைவெளி பரணியை அதிகமாய் ஒட்டவிடவில்லை.

பமீலாக்கா திருமணத்தின்போது பரணிக்கு பத்து வயதிருக்கும். சிறுவயதின் சந்தோஷ நினைவுகளில் அந்த வைபத்திற்குத்தான் முதல் இடம்.

வெள்ளை அடிக்கப்பட்டு, பால் போல பிரகாசித்த நட்சத்திர பங்களா எங்கும் பொடி விளக்குச் சரங்கள்.

வீட்டு முகப்பின் நான்கு வளைவுகளிலும் மின்னி மின்னி கண்சிமிட்டிய வர்ண விளக்குகள்.

பருத்த தூண்களை வளைத்துச் சுற்றியபடி ஜரிகைப் பூக்கள். பரணிக்கும் புதுசு எடுத்திருந்தார்கள்.

'பரணி, வா. உனக்கும் வர்ணம் போட்டுவிடுறேன்' என்று மணப் பெண் பமீலா, இவள் குட்டி நகங்களுக்குச் சாயமிட்டாள்.

மூன்றாம் நிமிடம் சாயம் காய்ந்திருக்கும்- ஆனாலும் அன்று முழுக்க தான் நகங்களை 'ப்பூ' என்று ஊதியபடி- முட்டையை ஆனந்த அடைகாத்த கோழியாய் திரிந்தது இன்னும் மறக்கவில்லை.

சமையலறையில் சதா ஜமாய்க்கும் வாசனை.

அம்மாவும் அங்கேதான் ஒத்தாசைக்கு நின்றிருந்தாள்.

'சுப்பு... முதல்ல உம்பிள்ளைகளுக்கு சாப்பாடு போடு. சிறுசுங்க பசி தாங்காது' பெரியம்மா முதலிலேயே கறாராய் சொல்லிவிட- நேரா நேரத்திற்கு விருந்து.

புதுத் தீப்பெட்டி போல வீடு நிரம்ப மனிதர்கள்.

சந்தோஷ முகத்துடன் உறவுக் கூட்டம்.

அத்தனையிலும் ஒன்றே ஒன்றுதான் நெருடலான நினைவு... அல்லது ஒருவன்தான் மீசை அரும்பும் பருவத்திலிருந்த பாஸ்கர்.

இவளைச் சதா முறைத்தபடி, இவள் கையின் பதார்த்தங்களைத் தட்டிப் பறித்து தன் வாயிலிட்டுக் கொள்ளும் போக்கிரி. 'கை வலிக்குது... விடுங்க' என்று இவள் சிணுங்கும்வரை விடாது அளுத்துவான் அக்குறும்புக்காரன்.

நிர்மலாக்காவின் திருமணமும் தடபுடல்பட்டது என்றாலும், அப்போது பரணிக்கு வயது பதினாறு. பெரியம்மா இவளுக்காக புதுப்பட்டுச் சேலையே எடுத்திருந்தார்.

பாசிப் பச்சையில் காசிப்பட்டு.

அதைக் கட்டிக்கொண்டபோது, கொசுவங்களைச் சீராக்கிய அம்மா திருஷ்டி கழித்தாள்.

'யப்பா... கொடி சுத்தின பொற்சிலை போலேயிருக்கே' என்று.

ஆனாலும் அது சங்கடமாய் உணரும் வயது. ஆக, இவள் அடுத்ததாய் பமீலாக்காவின் திருமணத்தின்போது முன்பு போல எங்கும் கையில் பிசுபிசுக்கும் இனிப்புடன் சுற்றித் திரியாமல் அம்மாவுக்கு உதவியாய் ஒதுங்கியே நின்றாள்.

பலரும் பிரியமாய், 'அடடே, சுப்புவோட சின்னப் பெண்ணைப் பாரேன்...கொடியாய் வளர்ந்துட்டா' என்று கன்னம் தட்டினர்.

'ஆளு அஞ்சரை அடின்னா... பின்னல் அஞ்சடி இருக்கும் போல?' என்ற வாஞ்சையான பாராட்டு.

இப்பொழுதும் பாஸ்கர் அவளை முறைத்தான்!

அவன் பெரியம்மா வீடு வந்திருப்பது தெரிந்தால், இவள் வீட்டைவிட்டே இறங்கமாட்டாள். இம்முறை தவிர்க்க முடியாத சூழ்நிலை.

அவனும் வெகுவாய் வளர்ந்திருந்தான். மீசையும், மாரும் முரட்டுத்தனமாய் தோன்றின.

ஆனாலும், அவனை நிமிர்ந்து நேரே பார்க்கவே முடியாத



படிக்கு அவன் விழிகள் இவளை மாம்பழத்து வண்டாய் குடைந்தன.

பம்மிப் பதுங்கினாள்.

'என்ன பரணி... போன தடவை சதா கையிலே பிசுபிசுன்னு லட்டு, ஜாங்கிரியோட அலைஞ்ச; பிடுங்கித் தின்ன லேசாய் இருந்துச்சு. இப்ப நீ சாப்பிடறதேயில்லை? இப்படி மெலிஞ்சிட்டே?'

சீண்டுபவனை ' நான் செவிடு' என்ற பாவனையுடன் கடந்து போவாள்.

அச்சமயம் அக்கா மசக்கையில் துவண்டிருக்க- பரணிக்கு கூடுதல் பொறுப்புகள்.

பட்சணம் பொரித்தாள். கல்யாணப் பை மடித்தாள்.

விருந்தினர்களை கவனித்து உபசரித்தாள்.

வெளிநாட்டிலிருந்து இரண்டு அக்காமார் வர, இவளுக்கு ஏகப்பட்ட பரிசுப் பொருட்கள் சேரும். நடுநிசி வரை பங்களாவில் பேச்சும், சிரிப்பும் ஓயாது.

ஆனால் அப்பா மரணத்திற்கு இம்முறை மகள்கள் வந்திருக்க, பங்களாவில் மயான அமைதி... அந்தக் கட்டடமே ஓய்ந்து சரிந்த பிரமை.

'பரணி, இனி அம்மா இங்க தனியாய் இருக்க வேணாம். என்னோட பிளாரிடா வந்திரட்டும்'

'ச....சரிக்கா'

'ஆனா, அம்மா உனக்காக யோசிக்கிறாங்க. சிறு பெண்ணை எப்படி தனியே விட்டுட்டுப் போகன்னு...'

'நீ இருக்கற வீடு உனக்கேதான் பரணி. நீ தொடர்ந்து தங்கிக்கலாம். தவிர, தோட்டக்கார தாத்தாவுக்கு மாசா மாசம் சம்பளம் அனுப்பிடுவோம். துணைக்கு அவரும் இருப்பார்.'

'ம்... ம்...'

அம்மாவுக்கு மாற்றம் தேவை. ஆறு மாசம் அக்காவோட, பிறகு ஆறு மாசம் எங்கூட லண்டன்ல தங்கட்டும். அப்புறம் அவங்க மனசுக்கு எங்கே பிடிக்குதோ அங்கே இருக்கட்டும். இந்தியாவுக்கும் அப்பப்போ வரட்டும்... ஆனா, எங்களோடு இப்ப கிளம்பறது நல்லது...'

'ஆகட்டுங்க்கா.'

முழு மனதாய் சொல்ல முயன்றாள்– ஆனால், சம்மதம் தர சங்கடமாக இருந்தது– எதிர்கால பயம் உச்சியைப் பிடித்து ஆட்டிற்று.

'நீ அம்மாட்ட வந்து சொல்லு பரணி.'

எல்லோருமாய் சேர்ந்து பேசி– பெரியம்மாவை விமானம் ஏறச் செய்தாயிற்று. ஆனால், இந்தப் பதினைந்து நாட்களாய் வீடு வெறிச்சோடிக் கிடக்கிறது– அலை மறந்த சமுத்திரம் போல...

சமையல்கார ராணியும் இல்லாததில் பின்கட்டிலும் கடும் அமைதி. தோட்டக்கார தாத்தா மட்டும் அங்குமிங்குமாய் உலாவித் திரிவார்.

முன்பு இப்படி மதுரைக்குப் போய் அலைந்து, வாடித் திரும்பும் வேளைகளில் முதலில் பரணிதான் பங்களாவினுள் நுழைவாள்.

'வாம்மா பரணி– முதல்ல இந்த மோரைக் குடி... ராணி ரெண்டு தோசை வார்த்தெடு' என்ற பாசமான அரவணைப்பு கிடைக்கும்.

இப்போது அரவணைக்க யாருமில்லை.

**வீ**ட்டின் வெளி 'கேட்' திறந்து கிடந்தது.

ஏன்...?

காம்பவுண்டினுள் நுழைந்தவளுக்கு மேலும் ஆச்சரியம்.

பறந்து பாய்ந்து வந்த பெரிய கரும் பச்சை கார், பங்களாவின் முன் பவிசாய் நின்றது.



வெகு தொலைவு ஓடி வந்தது போல அதன் கீழ்ப்புறமெல்லாம் அடர்ந்த புழுதி.

இதில் வந்தது யார்?

வீடு பூட்டியிருப்பதைப் பார்த்த பிறகும் வந்தவர்கள் ஏன் போகவில்லை?

பங்களாவின் அகலப் படிகளை ஏறிப் பார்த்தவளுக்கு மேலும் திகைப்பு.

வீட்டின் பருத்த இரு தேக்குக் கதவுகளும் விரியத் திறந்திருந்தன.

## 3

**வெ**ந்த உருளைக் கிழங்கைத் தோலுரித்து மசித்தவளுக்கு உள்ளே நூறு கேள்விக் கொக்கிகள்.

'வந்திருப்பது யாராய் இருக்கும்?'

நிச்சயம் திருடனில்லை!

கதவு சாவியிட்டு முறையாகத்தான் திறக்கப்பட்டிருந்தது. தவிர, வந்திருப்பவர்கள் அந்தஸ்து உள்ளவர்கள்தாம்.

சாட்சிக்கு வாசலில் நிற்கிறதே பல லட்சம் பெறுமானமுள்ள வாகனம்!

விவரம் கேட்கலாம் என்றால், தோட்டக்கார தாத்தாவைக் காணவில்லை.

எங்கே போனார்?

மணி ஏற்கெனவே நாலு.

பதினைந்து நிமிடங்களில் அனு வீடு திரும்பிவிடும்– 'மசாலா தோசை'க் கனவுகளுடன்!

எனவே, சமையலில் மும்முரமானாள்.

வேண்டியளவு தோசை மாவைக் கரைத்து தனியே வைத்தவள், மசாலாவைத் தாளித்துவிட்டு முகம் கழுவ ஓடினாள்.

உடம்பைக் கழுவித் துடைத்தால் சுகமாயிருக்கும். தாகம், வியர்வையுமான நசநசப்பு.

ஆனால், அனு வரும் நேரம்... சமையல்கார ராணிகூட

## NOTICE

Statement of ownership and other particulars about "RANI MUTHU", CHENNAI.

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | 86, Periyar High Road, Chennai - 600 007. |
| 2. Periodicity of its Publication | : | Fortnightly |
| 3. Printer's Name | : | C. KALYANASUNDARAM |
| Nationality | : | Indian |
| Address | : | 86, Periyar High Road, Chennai - 600 007. |
| 4&5. Name of Publisher & Editor | : | R. BASKARAN |
| Nationality | : | Indian |
| Address | : | 86, Periyar High Road, Chennai - 600 007. |
| 6. Name and address of the Owner | : | M/s. Rani Syndicate, 86, Periyar High Road, Chennai - 600 007. |

I, R. BASKARAN, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date: 1-3-2009

Sd/- R. BASKARAN,
Publisher.



ஆச்சரியப்படுவாள்.

'அம்மாக்காரி கூட இத்தினி கரிசனம் காட்டமாட்டாப்பா. சித்திக்காரி ஏன் இப்படி உயிர விடறே? இது அனுவுக்கு... அதுவும் அனுவுக்குன்னு...? உனக்குன்னும் ஒரு வாழ்க்கை அமையணும்... நினைப்பு வையி...'

'அனு குட்டி நல்லாயிருந்தா அது போதும் ராணி. எனக்காவது விவரம் தெரிஞ்சப்போ அம்மா இருந்தாங்க. பாசமாய் ஒரு அக்கா... அனுவுக்கு நான் மட்டுந்தானே?'

'பாசங்காட்டு சரி. தியாகம் செய்றேன்னுராத. உனக்கும் புருஷன், புள்ள குட்டி வேணும்'

சமையல்கார ராணியின் வயதைக் கணிக்க முடியாது.

இருபத்தி ஐந்திலிருந்து நாற்பதுக்குள் எதுவாகவும் இருக்கலாம்.

கல்யாணம் ஆகவில்லை என்றாலும்.. தங்கை, தம்பிகள் என்று பெருங்குடும்பம்.

தன்னைப் போல மற்றொருத்தியும் வெளிச்சம் தந்துவிட்டு மெழுகாய் கரையக்கூடாதே என்ற கரிசனை உள்ளவள்.

'எனக்கு வர்றவர் அனு மேல இத்தனை பாசங் காட்டுவாரா?'

'ஏங்காட்டணும்? கட்டினவ மேலயே ரெண்டு வருஷம் போனா பாசங்காட்டுற ஆம்பிளைகளைப் பாக்கறது ரேரு! இதுல 'இது நொச்சு'ங்கற நினைப்புதான் வரும் அவனுக்கு'

'வரும்ல? அதான் கல்யாணத்தைப் பத்தியே நான் யோசிக்கறதில்ல ராணி. இது தியாகமில்ல- யதார்த்தம்- நடப்பு- அவ்வளவுதான்.'

'ஒண்ணு சொல்வேன். இத்தினி அழகிருக்கே. புருஷன் ரசிச்சு... உன்னைப் போல ரெண்டு பிறக்கட்டும்.... அழகை வீண்பண்ணுவானேன்?'

'சரி... அடிக்கடி நான் என்னைக் கண்ணாடியில்

பாத்துக்கறேன்' -சிரிப்பாள் பரணி!

என்ன பெரிய அழகு?

அம்மாவின் அழகு அவளுக்கு உபத்திரவம்தான். அப்பாவிற்குப் பிறகு பலரை ஈர்த்த அழகு. அம்மாவைப் பதற வைத்த அழகு. இப்படி நல்லவர்களின் ஆதரவு கிடைக்காவிடில் தங்களது நிலைமை...? பரிதாபமாயும், பயங்கரமாயும் போயிருக்குமே?

அவள் கண்கள் தன்னிச்சையாய் கடிகாரத்திடம் போயின. மணி 4.25. இன்னும் ஏன் அனுவைக் காணவில்லை?

குட்டி 'பிரிஜ்'லிருந்த சாம்பாரை எடுத்து சூடு பண்ணினாள். இன்று பள்ளியில் ஏதேனும் விசேஷமா? விளையாட்டா?

முன் 'கேட்' வரை அரவமே இல்லை. குளித்துவிடுவது. பிறகு பள்ளி வரை ஒருநடை போய் பார்த்து வரலாம். இல்லையெனில் தாங்காது.

'விடுவிடு' என ஆடைகளைக் களைந்தவள், மேலுக்கு நீர் விட்டாள். கடலை மாவு தேய்த்து அலசினாள். மாற்று உடுத்தி, முடியைச் சிக்கு பிரித்து, அவசரத்திற்குக் கொண்டையாய் சுழட்டியபோது முன்புறம் பேச்சும், சிரிப்பும் கேட்டன.

முகம் மலர்ந்தது... இது அனுவின் மழலை ஒலி.

ஆனால்... கூடவே சேர்ந்து சிரிக்கும் ஆண் குரல்?

அவள் விரைந்து வீட்டின் கதவைத் திறக்க, ஓடிவந்து கட்டிக்கொண்டது அனு.

"சித்தி... ம்... வாசமா இருக்கிங்க...!"

வெகுபரிச்சயமான அந்த ஆண் முகத்தை அழுந்தப் பார்க்க முடியாமல் கூச்சத்துடன் குனிந்தாள்.

"என்ன பரணி? 'இதுதான் உன் பாஸ்கர் சித்தப்பா'ன்னு அனுவிற்கு அறிமுகம் செஞ்சு வைக்க வேண்டிய நீயே... இது யாருன்னா எப்படி?"



முறுவலித்தபடி கேட்டவனைப் பார்த்தாள்.

"ஓ...? அந்த முரட்டுப் போக்கிரி பாஸ்கரா...? சரிதான்! ஆனால், அதென்ன சித்தப்பா முறை?"

குழப்பம் தீர்ந்த முகத்தில் சிடுசிடுப்பு ஏறியது.

மவுனமாய் நிற்க முடியாது என்பதால்,

"நீங்கதான் அந்தப் பச்சை காரிலே வந்தீங்களா?" என்று கேட்டு வைத்தாள்.

"நானேதான். பெரியப்பா இறந்த சமயம் நான் சிங்கப்பூரிலே இருந்தேன். வேலை விஷயமான பயணம். ஆக, தகவல் எட்டலை. போன வாரந்தான் சென்னை வந்தேன். விவரம் தெரிஞ்சதும் பமீலாவுக்கு 'போன்' போட்டேன்."

"பெரியம்மா, அக்கா எல்லாரும் பத்திரமாய் போய்ச் சேர்ந்தார்களாமா?"– ஆர்வமாய் கேட்டாள்.

"ஆமா– நல்லபடி ஊர் வந்தோம்ங்கற விவரத்தை நட்சத்திரா சித்தி உன்கிட்ட சொல்லச் சொன்னாங்க."

"பெரியம்மா பேசினாங்களா?"

"பேச்சு முழுக்க நீதான். அப்புறம் இந்த அனு குட்டியைப் பத்தின நீள்...ள விசாரணை. பங்களா சாவியை என் ஆபீசிலே விட்டுட்டுப் போயிருந்தாங்க..."

பேச்சோடு அனுவைத் தூக்கிக்கொண்டான். அந்த அகன்ற தோள்களில் சிறுமியைப் பார்த்தது பாந்தமான காட்சி. மனதை நெகிழச் செய்தது.

அத்தான் இருந்திருந்தால் அனுவிற்கு இப்படி அடிக்கடி ஆண் தோளின் சவாரி கிடைத்திருக்கும்.

"எப்படி இருக்காம் அமெரிக்கா?"

"முழு மாற்றம். பெரியம்மாவுக்கும் தேவைதான். உற்சாகமாய் பேசினாங்க. விதவிதமாய் சமைக்கறாங்களாம்– தேங்காய்ப்பால் கூட டின்னிலே வர்றதால நிமிஷமாய் மீன்

சொதி தயாரிச்சேன்னு குஷியாய் சொன்னாங்க."

"ஆஹா..."

"எல்லா விவரமும் உனக்கு லெட்டரில் வரும். கம்ப்யூட்டர் இ-மெயில் எல்லாம் அவங்களுக்குப் பிடிக்கலை. ஆனா, கடிதம் வந்து சேர ரெண்டு வாரமாயிடுதே. அதான் இந்த விவரமெல்லாம் போய்ச் சொல்லுன்னு என்னை முதல்ல துரத்திவிட்டாங்க."

"என்...என்ன, இதுக்காக வந்திங்களா?"

கேட்ட பிறகுதான் அசட்டுத்தனம் புரிந்தது.

யாரோ ஒருத்திக்கு சேதி சொல்ல யார் ஐநூறு கிலோ மீட்டர் ஓடிவருவார்கள்?

பேச்சை மாற்றினாள்.

"அனு இன்னும் கை, கால் கழுவிக்கலை."

குழந்தையைப் பூப்போல இறக்கிவிட்டான். இவனை நிற்க வைத்துவிட்டு, தாங்கள் மட்டும் எப்படி உள்ளே போவது என்ற குழப்பத்தில் பரணி தயங்க– அவன் தயக்கமே இன்றி வீட்டினுள் வந்தான்.

சுவரோரம் கிடந்த பிரம்பு நாற்காலியில் சரிந்து அமர்ந்தான். அச்சிறு இருக்கையில் அவன் ஆறடி நீள உடம்பைப் பார்ப்பது விநோதமாக இருந்தது.

நீள கால்களில் இளநீல ஜீன்ஸும், உயர்தர காலணிகளுமாய்.

இங்கு வரும் அனைவரும் பெண்கள். தையல் வேலைகளில் உதவ, துணிகளை வாங்கிப்போக என்று.

பெரியம்மா இருந்தவரை மொத்த வியாபாரிகளை பங்களாவிலேயே வைத்துப் பேசி முடித்துவிடுவார். இவள் வீட்டு வாசலில் வைக்கும் 'பார்சல்'களை எடுத்துக்கொள்ள ஆண்கள் வருவதோடு சரி. உள்ளே யாரும் நுழைவதில்லை.

இத்தனை உரிமையாய் கால் நீட்டி அமர்ந்து தினசரியைப் புரட்டுவதில்லை.



ஆனால், தற்சமயம் இவனைக் கிளப்பவும் வழியில்லையே!

அனுவைச் சுத்தப்படுத்தி, உடை மாற்றி அழைத்து வந்தாள். அவன் அதே இடத்தில்தான் இருந்தான். இவளுக்குள் சங்கட உணர்வு.

அச்சிறு வீட்டை நிறைத்து, மறித்து நந்தி தோரணையில் உட்கார்ந்திருந்தான்.

"எப்.எம். ரேடியோவில் நல்ல பாட்டு வருமே...?" என்றான் இயல்பாய்.

"ம்..."

"போடேன்."

இதென்ன ஒட்டகக் கதை!

சிறிது இடந்தர அது கூடாரத்துக்குள்ளே முழுசுமாய் நுழைந்து அடைத்தது போல...?

ஆனாலும், பெரியம்மாவின் பிரிய உறவினன்– துரத்த முடியாது.

ரேடியோ குமிழை திருக, பாடல்கள் கிளம்பின. வெகு இனிமைதான். ஆனால், அத்தனையும் காதல் பாடல்கள். அச்சிறு அறையில் அவனோடு இத்தகு பாடல்களைக் கேட்பது அவஸ்தைதான்!

"நா...நான் தோசை போடணும். அனு... டிபனுக்கு."

"ஓ...யெஸ். நானும் உன் மசால் தோசைக்காகத்தானே காத்திருக்கேன்."

அடுத்த குண்டைத் தலையில் இறக்கினான் அவன்.

"அ... சரி..."

சமையலறை மிகவும் சிறியது.

அம்மா இங்கு குடியேறியபோது இவ்வீட்டில் ஒரே அறையும், கழிப்பறையும் மட்டும்தானாம்.





'கூட ரெண்டு சிறு அறை போட்டுத் தந்திடுங்க... ஒண்ணு சமைக்க, அடுத்தது படுக்கன்னு. இல்லைன்னா சுப்பு எங்கே தையல் மெஷினை போடுவா... உக்காந்து தைப்பா?' என்று பெரியம்மா கட்டித் தந்திருந்த வீடு சவுகர்யம்தான் என்றாலும், அது பெண்கள் புழங்கக்கூடிய அளவில்தான் இருந்தது. இவன் இதைப் பரமாத்மா போல் வியாபித்து நிரப்புகிறானே!

இல்லை... அது தன் பிரமையோ?

"என்ன அனு..? உங்க சித்தி மனசேயில்லாம 'சரி' சொல்றாங்க? நீ சாப்பிடக் கூப்பிட்டியேன்னு வந்தேன். பரவாயில்ல. நாங்கொண்டு வந்த வறண்ட ரொட்டியே போதும்."

சோகமாய் வைத்துக்கொண்டான் முகத்தை.

"ஆமா சித்தி. அங்கிளை நாந்தா கூப்பிட்டேன். ராணிக்கா நாளைக்குதான் வருமாம். தோட்டத் தாத்தா சொன்னாங்க..."

"ஓ... ராணியும் வர்றாளா?"

"பின்ன, தினம் மசாலா தோசைநீ தர முடியுமா? அதான் சமைக்க ராணியை வரச் சொன்னேன். சித்தியும் அப்படித்தான் சொல்லிவிட்டாங்க..."

அப்படியானால் இவன் தங்கல் இங்குதானா?

மூச்சை அடைத்தது.

அவள் அமர்ந்து தைக்கும் தையல்மெஷின் முக்காலியை சமையல் அறைக்குள் இழுத்துப் போட்டுக்கொண்டவன், இரு குவளைகளில் நீர் ஊற்றி வைத்து தயாராய் தட்டைக் கையில் எடுத்துக்கொண்டான்.

'யாருமில்லாத இந்த அவாந்திரத்தில் ஒட்டகமாய் ஒட்டும் இவனோடு இன்னும் எத்தனை நாட்கள்?'

பெருமூச்செறிந்தபடி தோசைகளை வார்த்தாள் பரணி.

# 4

**கை**யில் ஆவி பறக்கும் காப்பியோடு இப்படி வாயிற்புற சாய்ந்து நிற்பது இவளுக்கு பிடித்த வேளை.

வீட்டின் வலப்புற ஓரமாய் நிற்கும் மொட்டை மரத்தை இலக்கின்றி பார்த்தபடி துளித்துளியாய் காப்பியை ரசித்து உள்ளிறக்குவாள்.

'ஏந்தாத்தா, இந்த மரம் ரொம்ப நாளா மொட்டையா நிக்குதோ. இதை வெட்டிட்டு 'பளிச்'சுனு பூக்கற மரமா ஒண்ணை நட்டா என்ன? இல்லைன்னா, ஒரு வேம்பு- உடம்புக்கு அந்தக் காத்து பலம்ல?'

'இல்லப்பூ... துணி காயவிடறக் கயிறு, இதுக்கும் வெளிச்சுவருக்குமாத்தானே நிக்குது? இந்தத் திசையில் துணிங்களைக் காயவிட்டா காலை, உச்சி வெயிலு தோதாப்பட்டு துணிங்க நிமிசமாய் காஞ்சிடுது. இதை வெட்டிட்டா எப்ப வேற மரம் முளைக்கதுங்கறா ராணி... தவிர, மரத்துல முனிகினி ஏதானும் இருந்தா... வெட்டவுடாது...'

'வெறும் ஒரு கம்பை நடறது?' -இப்படி சொன்னாலும் அந்த உயிரற்ற மரமும் பழகிப் போனது.

அதேபோல காலையும், மாலையும் அதில் வந்து அமரும் ஒற்றைக்குருவியும் கூட... மொட்டை மரத்தின் உச்சிக்கிளையில் வெகுநேரம் 'தியானம்' செய்துவிட்டுப் போகும்.

பத்து மணிக்கு மேல் அதிலிருந்து நீளும் கொடியில் வண்ண வண்ண துணிகள் படபடப்பதுகூட அழகுதான்.

விழிகளைச் சுழற்றினாள்.

பதினைந்து நாட்களாய் பூட்டப்பட்டிருந்த மாடி அறையின் சன்னல்கள் விரிந்திருந்தன.

'எத்தனை நாட்கள் தங்குவதாய் உத்தேசம்?' என்று



வந்திருப்பவனை இவள் கேட்பது நாகரீகமில்லை.

அவன் உரிமையுள்ள விருந்தாளி வேறு!

ஆனால், உள்ளே அதே கேள்வி விடாது குடைகிறது.

நேற்று மசால் தோசையை மென்றபடி பேசினான்.

"பிரமாதம். ராணி கை 'நளபாகம்' எப்படின்னு தெரியலை. ஆனா, அடிக்கடி இங்கே வந்திடுவேன். இந்த வீடு எப்படி வசதியானதுதானா பரணி? ரொம்ப சின்னது இல்ல...?"

"எங்களுக்குப் போதும்" அமர்த்தலாய் சொன்னாள்.

"பங்களா ரொம்ப பெரிசு. துணைக்கு இதே காம்பவுண்டுல நீங்க ரெண்டு பேர் இல்லைன்னா நான் தங்கறது சிரமம்- காடு போலிருக்குது. ஆனால், ரெண்டு அழகிய பெண்ணுங்க வளைய வந்தா இதுவே பிருந்தாவனமாய் மாறிடுது."

"நீங்க கோகுல கிருஷ்ணனாய் இருக்கலாம். ஆனா, நாங்க கோபிகா ஸ்திரிகள் இல்லை" -சிடுசிடுத்தாள்.

இங்கே தங்கப் போகிறவனது வாலை ஆரம்பத்திலேயே சற்று நறுக்கி வைத்தால் தேவலை. இல்லையென்றால் வம்புகள் வரம்பு மீறிப் போகுமே?

இப்படி ரசித்துச் சாப்பிடுபவன் தினமும் தட்டோடு வந்து உட்கார்ந்துவிடுவான்.

"ஸ்ஸ... ஆ..."

"என்ன?"

"ரொம்ப காரம்... பேச்சு, பச்சை மிளகாய்... ரெண்டும்!" கண் சிமிட்டினான்.

அக்குழந்தைத்தனமான சமிக்ஞை சிரிப்பு மூட்டியது.

சிரமப்பட்டு அடக்கிக்கொண்டாள்.

காலையில் எழுந்ததும் பரணி அருந்துவது ஒரு சொம்பு தண்ணீர்தான். பிறகு வேலைகளை முடித்தபின் அனுவோடு

சேர்ந்து காலை சிற்றுண்டி.

வீடு பெருக்கி, துணிகளை துவைத்து உலத்திய பின் அவள் ஆவலோடு எதிர்பார்க்கும் சிறு ஓய்வு இது.

சூடான காப்பியை ரசித்துப் பருகி, உடலைத் தளரவிடும் சில நிமிடங்கள்.

இன்றைய வேலையை நினைத்ததுமே உற்சாகமாய் இருந்தது. காரணம், தைக்க இருந்தது அனு குட்டிக்கான பட்டுப்பாவாடை.

மற்றபடி வேலை இயந்திரத்தனமாய் போகும். முடியும்போது உடம்பும், மனதும் அலுத்து சோரும்.

இம்முறை அனுவின் பிறந்தநாள் ஞாயிற்றுக்கிழமையாய் அமைந்தது. போனமுறை அம்மா தவறினதைக்கொண்டு எந்த கொண்டாட்டமும் இல்லை. அதற்கும் சேர்த்து இவ்வருடம் ஈடுகட்ட வேணும்.

அருகில் இருந்த அனுவின் சிநேகிதக் குட்டிகளை மாலையில் தன் வீட்டிற்கு அழைத்திருந்தாள்.

இரு வகை இனிப்பு, காரம், பழரசம், விளையாட்டு என்று வைத்தால் பிள்ளைகளுக்கு இரண்டு மணி நேரம் குஷியாய் கழியும்.

அனுவும் மகிழ்ந்து போகும்.

பாவாடைத் துணியைப் பிரித்துப் போட்டாள்.

வேலை செய்ய இது தோதான இடம்.

நகரின் விளிம்பில் இருந்தும் இது ஒதுக்குப்புறம். பிரதான சாலையிலிருந்து நன்கு உள்ளடங்கியதால் வாகன இரைச்சல், புழுதி எட்டாது.

'வாழ்க்கையில் கிடைத்த நன்மைகளுக்கு முதல்ல நாம நன்றி சொல்லிப் பழகணும்' என்பார் அடிக்கடி பெரியம்மா.

உண்மைதான்!



உற்சாகமாய் பாவாடை மடிப்புகளை அடுக்கிய நேரம், அந்த ஹாரன்' ஒலி கேட்டது.

வருவது அர்ச்சனா என்று எண்ணி முடிக்கும் முன்பே பரணியின் வலது கை வாய்க்குப் போனது!

'ஐயையோ... இன்னும் அவள் தந்த ரவிக்கை வேலையை முடிக்கலியே!' நினைத்த நெஞ்சு படபடத்தது.

'விர்'ரென்று புலிக்குட்டி போல வந்து நின்றது அந்த மஞ்சள்நிற கார்.

தன்னைப் பேயறைந்தாற் போல பார்த்து நின்ற பரணியைப் பார்த்தவளுக்கு விவரம் புரிந்துபோனது.

"என்ன... வேலை இன்னும் முடியலையா?" அர்ச்சனாவின் லிப்ஸ்டிக் உதடுகள் சுழித்தன.

ஏதோ இந்த வேலை முடிய தான் இதுவரை நான்கு முறைகள் நடந்து ஓய்ந்த ரீதியில் அர்ச்சனா பேசியது சற்று எரிச்சல் மூட்டியது. ஆனாலும் அதை வெளிக்காட்ட முடியாதே!

"அ...ஆமா...ஸாரி."

"என்ன நீ? ஏற்கெனவே தைச்ச ரவிக்கையில அங்கேயும் இங்கேயுமாய் சில மாறுதல்கள் பிடிக்கணும், பிரிக்கணும். அதையுமா செய்யலை?"

அவள் தந்திருந்த நான்கு ரவிக்கைகளும் சென்னையில் புகழ்பெற்ற தையலகத்தில் சோளி ஒன்றிற்கு நூறு ரூபாய் வீதம் கூலி தந்து தைத்துக்கொண்டவை. ஆனாலும், உடம்பில் அத்தனை பாந்தமாய் பொருத்தாமல் போக, திருத்தங்களுக்காய் இங்கு வந்திருந்தன.

"பிரிச்சுட்டேன் மேடம்... இருபது நிமிஷம் இருந்தா தையலும் போட்டிருவேன்."

"நானென்ன உன்னை மாதிரி சும்மா வீட்டோட கிடக்கிறவளா? இப்ப மதுரை போகணும்... என்ன இப்படி பொறுப்பில்லாம...

இத்தனை மறதி... ச்சே..."

'மளுக்'கென பரணி கண்களில் நீர் நிரம்பியது.

காரணம், அர்ச்சனாவின் அர்ச்சனை மட்டுமல்ல; அதைக் கேட்டபடி பாஸ்கரன் பின்னாலே வந்து நின்றதுதான்!

"பரணி... யாரிது?" அவன் அதட்டலாய் கேட்டான்.

'விர்'ரென ஒரு ராணியின் தோரணையில் திரும்பிய அர்ச்சனா, மறுகணம் பூனையானாள்!

சிடுசிடுப்பு போய் சிரிப்பு ஏறியது.

"நான்... நீங்க யார்? புதுமுகமாய் தெரியுது. அலோ..."

சாட்டையாய் வளையும் அவளது நாக்கில் தேன் சொட்டியது!

"வீட்டுக்கு வர்றவங்கதான் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளணுமே தவிர, வீட்டுக்காரங்க இல்லை" மிடுக்காய் வந்தது பதில்!

அவள் மேலும் குழைந்தாள்."நான் அர்ச்சனா. பக்கத்துல 'சுகர் மில்' இருக்குதே... அதன் ஜெனரல் மேனஜரோட பொண்ணு. பரணிகிட்ட துணி தைக்கக் கொடுக்க வருவேன். இன்னும் வேலை முடியலையாம். மறந்துட்டேங்கறா... பச்... நான் இப்ப என்ன செய்யறது? இன்னைக்கு மதுரையில் சில வெளிநாட்டக்காரங்களை நான் சந்திக்கணும். பட்டுச்சேலை கட்டலாம்னா... அதற்குரிய ரவிக்கை இவகிட்ட மாட்டிகிச்சு...!"

"வீட்டுக்கு வரலாமே? ஒரு 'கூல் டிரிங்ஸ்' குடிக்கறத்துக்குள்ளே துணி தயாராயிடும். இருபது நிமிஷம்னு சொன்னேல்லியா பரணி?"

இவளைப் பார்த்தான்.

"ம்ம்... ஆமா."

அவன் திரும்பி நடக்க , பால் தட்டுக்குப் பின்னே போகும்



பூனைக்குட்டியாய் அவனைத் தொடர்ந்தாள் அர்ச்சனா.

ஆச்சரியமாகவும், துளி எரிச்சலாயும் இருந்தது.

இவன் இந்நேரம் இங்கு மூக்கை நீட்டுவானேன்?

அதோடு நில்லாமல் பல்லை இளித்து வந்தவளை அழைப்பானேன்?

அவளும் தேனில் விழுந்த ஈ போல அவன் பின்னால் போவானேன்?

பரணி வேலைகளை மறக்கும் ரகமில்லை.

மறந்தாலும் லேசில் விட்டுவிடும் பெண்ணில்லை அர்ச்சனா.

ஆக, இதோடு போனதே என்று நிம்மதி காணாமல் ஏன் இத்தனை ஆராய்ச்சி?

மனதைக் கட்டினாள்.

ரவிக்கைகளோடு அமர்ந்து வேலைகளில் ஒன்ற முயற்சித்தாள்.

வேலையை முடித்து துணிகளை இஸ்திரியிட்டு மடித்தாள். சிறுபையினுள் அவற்றை இட்டு வெளியே வந்த நேரம், இருவரும் ஜோடியாய் எதிரே...

கண்ணை நிறைத்த ஜோடி... ஆனால், கருத்துக்கு ஏற்கவில்லை.

"அட... சொன்ன நேரத்துக்கு முடிச்சிட்டியே?" –சிறுபிள்ளையைப் பாராட்டுவது போல ஏக உற்சாகமாய் பேசினான் பாஸ்கரன்.

அதாவது இவளுக்கு உதவிவிட்டானாம்.

"இன்னும் நேரமாகி இருந்தாலும்கூட நான் அலுத்திரு மாட்டேன் பாஸ்கர்."

அர்ச்சனா கொஞ்சினாள்.

சதா விறைப்பும், கர்வமுமாய் நிற்பவளை– நிமிட நே
காத்திருக்கப் பொறுமையற்றுப் பறப்பவளை இன்று குழைவ
பார்ப்பது புதுமைதான்!

என்ன வசியம் போட்டான் இவன்?

அப்போதுதான் புதிதாய் பார்ப்பவள் போல மீண்டும் அவ
மீது ஓரவிழி ஓட்டினாள் பரணி.

இந்திய சராசரி ஆணைவிட அரை அடி உயரம்.

ஆனால், ஒட்டகச் சிவிங்கி போல 'வெடவெட'ப்பா
தெரியாதபடி தோள்கள் அகன்று கிடந்தன.

இடுப்பும், காலும் வலுவாய்... வடிவாய்.

எதற்கோ அவன் சிரிக்க, விழிகளைஅவன் முகத்திற்
உயர்த்தினாள்.

முகமும் வெகு கவர்ச்சிதான்.

சீரான பல் வரிசையும், சிரிப்பில் இடுங்கும் விழிகளு
தனி ஈர்ப்பு.

ஒட்ட வெட்டப்பட்டிருந்தாலும் அடர்ந்து பளபளத்
தலைமுடி. ஜுன்ஸ் பாக்கெட்டினுள் இரு கட்டை விரல்களைச்
சொருகியபடி அவன் நின்ற தோரணை தனி கம்பீரம்.

இந்த மிடுக்கோடு இணைந்த பணம்தான் அவன் வசிய
ரகசியம்.

தங்க பாணமின்றி மன்மதனே வந்தாலும் லட்சியம்
பண்ணுவாளா அர்ச்சனா?

"வரட்டுமா பாசு, உங்களைச் சந்திச்சதில் எனக்கு ரொம்ப
மகிழ்ச்சி. இன்னைக்கு வர்ற ஜெர்மன் குழுவுக்கு மதுரையைச்
சுற்றிக் காட்ட ஏற்பாடு செய்யணும். ஒரு நாள் 'சுகர் மில்'லைக்
கூட அவங்க பார்க்கணுமாம். ஆக, மூணு நாள் நான்
'பிஸி'. ஆனா, வர்ற ஞாயிறு 'பிரீ'தான். அன்னிக்கு மதுரையிலே
ரஷ்ய பாலே நடன நிகழ்ச்சி ஒண்ணு போலாமா?"



"ஸாரி அர்ச்சனா. அன்னிக்கு எனக்கு வேற ஒரு முக்கிய
நிகழ்ச்சி இங்கே இருக்கு" –என்றவன் இவள் புறமாய்
திரும்பினான்.

பரணி அவசரமாய் தன் பார்வையை விலக்கிக்
கொண்டாள்.

அர்ச்சனாவைப் பழித்துவிட்டு தான் அவனை இப்படிப்
பார்வையால் விழுங்கினால் எப்படி...?

"அதை மறுநாளுக்கு ஒத்திப் போடக்கூடாதா பாசு?"

அரை மணி நேர சந்திப்பிற்குள் பாஸ்கர், 'பாசு'வாகச்
சுருங்கி கைக்குள் அடங்கியாச்சா?.

பரணியின் பொறுமல் அடங்கவில்லை.

"முடியாதே. அன்னிக்கு அனுவோட பிறந்தநாள் விருந்து.
நான் இல்லைன்னா இந்த ரெண்டு கோபிகா ஸ்திரீகளும்
கோபிச்சுப்பாங்க. பிறகு இந்தக் கண்ணன்பாடு கஷ்டம்....!"

இதென்ன? இவன் தன்னை தானாய் அழைத்துக்கொண்டு
விட்டு, தாங்கள் இவன் வராது போனால் உருகிக் கரைவதாய்
கதை அளக்கிறான்.

சற்றே பார்வையைக் காட்டமாக்கினாள்.

"அதுக்குள்ள முறைப்பு பார்த்தீங்களா? நம்ப வீட்டு
நிகழ்ச்சியை விட்டுட்டு நான் போவேனா பரணி?" –என்றான்
சர்க்கரை குரலில்.

அவன் கெஞ்சுவதைக் கேட்ட அர்ச்சனா முகம் கடுத்தது.

"ஓ... உனக்கிந்த வேலைக்கான கூலியைக் கொடுக்க
மறந்துட்டேன் பரணி. இந்தா..."

நூறு ரூபாய் நோட்டை உருவி நீட்டினாள்.

"பாக்கி பத்து ரூவாய்... இதோ..."

"பச்... இருக்கட்டும். உம் மறதிக்கு இதில் பாதிதான்

தந்திருக்கணும்- ஆனா, அதனாலத்தானே நான் 'பாசுவை சந்திக்க நேர்ந்தது? ஆக வச்சுக்கோ..."

முகம் கன்றி சிவக்க, குறுகி நின்றாள் பரணி.

## 5

சனிக்கிழமையே வீட்டில் விழாக் களை.

வெகு தூரத்திற்கு 'கேக்' வாசனை.

இவளுக்கு 'கேக்' தயாரிக்க கற்றுத் தந்த நட்சத்திரம்மா தன் 'ஓவனை'யும் இவளுக்கே தந்துவிட்டுப் போயிருந்தார்.

இவளது 'ஸ்பான்ஞ் கேக்' மெய்யாலுமே வாயில் கரையும்.

'கேக்' மீது 'சாக்லேட் ஐஸிங்' பரப்பி, அதில் வண்ண 'ஜெம்ஸ்' வில்லைகளை ஒட்டினாள். பழரசமும் தயார்.

நாளை கேரட் அல்வா, பஜ்ஜி வேலை மட்டும்தான். காலை நேரம், வாழ்வின் கசப்புகளை மறக்கடிக்கும் தித்திப்போடு ஆரம்பமாகட்டும்.

அனுவின் பாவாடையோடு, நாளை தான் கட்டவேண்டிய சேலையையும் இஸ்திரியிட்டாள்.

சேலை மாம்பழ வர்ண மைசூர் பட்டு. உடல் எங்கும் சரிகைப் புட்டாக்களோடு அரக்கு வர்ண முந்தானை. இதுவும் பெரியம்மாவினுடையதுதான். ஓரிருமுறையே இதைக் கட்டியபின்,

"வாங்கும்போதே யோசிச்சேன் பரணி. இத்தனை சரிகை தெளிச்சிருக்கேன்னு. தவிர உடம்போட ஒட்டிக்கிது வேற. அறுபது வயசுல அங்கும் இங்குமாய் பிதுங்கற சதையை வெளிச்சம் போட்டு வேறு காட்டணுமா? இது உன் வயசு பொண்ணுங்களுக்குத்தான் தோது. இந்தா பிடி" என்று



இவளுக்குத் தந்துவிட்டிருந்தது.

ஏதாவது ஒரு காரணம் சொல்லி அவ்வப்போது இப்படி பல பரிசுகள் இவளுக்கு வரும்.

இப்படித் தந்தால் பரணி மறுக்கமாட்டாள் என்பது பெரியம்மாவின் பிரிய சூழ்ச்சி!

கேக்கிற்காக மாவை, முட்டைகளை நுரைக்க அடித்துக் கலந்ததில் கை, தோள், முதுகு எல்லாம் வலி.

பலூன்களை இன்று ஊத முடியுமெனத் தோன்றவில்லை.

படுக்க வேண்டியதுதான்.

அனுவை ஏன் இன்னும் காணவில்லை?

பாஸ்கர் நாளைய விழாவிற்குத் தன்னையே அழைத்துக் கொண்டான் என்றாலும், நாமும் ஒரு வார்த்தை அழைத்தால் தான் மரியாதை என்ற எண்ணத்தில் சிறு அழைப்பு ஒன்றை எழுதி அனுவிடம் தந்தனுப்பியிருந்தாள்.

'அனுவின் ஐந்தாம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் விழாவில் கலந்துகொண்டு குழந்தையை ஆசிர்வதிக்க தங்களை அழைக்கிறேன். நாள் / நேரம் = நாளை (ஞாயிறு) மாலை 4 மணிக்கு' –என்று மொட்டையாய் தன் பெயரிடப்படாத ஒரு அழைப்பு. அனுவின் வற்புறுத்தலால் ஒவ்வொரு வார்த்தையையும் ஒவ்வொரு வர்ண 'ஸ்கெட்ச்' பேனாவால் எழுதியிருந்தாள்.

கொண்டுபோன குழந்தையை ஏன் இத்தனை நேரமாய் காணவில்லை?

ராணி வந்த பிறகு வீடு அத்தனை 'ஹோ'வென்று தனிமை காட்டவில்லை.

அனு சமையல் அறைக்குப் போயிருப்பாளோ?

ராணி, அனுவைத் தூக்கிக் கொஞ்சும் ரகமில்லை.

ராணி, அனுவைத் தூக்கிக் கொஞ்சும் ரகமில்லை. உருட்டாத குட்டி.

'இந்தா... கத்தி கபடாவையெல்லாம் உருட்டாத குட்டி.

கை காலுல பட்டா கஸ்டம்' என்று துரத்திவிடுவாள்.

இவள் சதா அனுவை இடுப்பில் இடுக்கிக்கொண்டு அலைய நிறுத்தி வைத்துப் பேசுவாள்.

'இதுக்கோசரம் பாத்தா நீ சொச்சநாளை ஒண்டியாத்தான் கழிக்கணும். இப்படி உசிராப் பழகாத. நாளைக்கு 'ஆஸ்டல்'ல விட்டா அது இருக்கணும்ல? அப்பத்தானே உனக்கு நிம்மதி?'

ஆக, பாஸ்கரனிடம்தான் குழந்தை இருக்க வேண்டும். இரண்டரை மணி நேரமாகவா?

சலிப்புடன் அனுவை அழைத்து வர கிளம்பினாள்.

கிளம்புவதற்காய் காலில் செருப்பு போடும்போது, அவர்களது சிரிப்பு கேட்டது.

சன்னல் வழியே குனிந்து பார்த்தாள்.

கைக்கொன்றாய் நூலில் கட்டிய கொத்து பலூன்களைப் பிடித்தபடி வந்துகொண்டிருந்தாள் குழந்தை. 'கும்'மென்று வானை முட்ட முயன்று கொண்டிருந்தன பலூன்கள், ஆனால், அவள் இடுப்புக்கு வளைந்து பூங்கொத்தாய் காற்றில் அசைந்தபடி அவளோடு மிதந்து வந்தன.

"அனு... எப்போ இத்தனை பலூன்களை ஊதினே?" ஆச்சரியம் மிகக் கேட்டாள்.

"எத்துட்டுப் போனேன். அங்கிள் ஊதிக் தந்தாங்க. டி.வி.யில 'கார்த் ்ரன்' பார்த்துட்டே சாப்பித்தேன். பெரியம்மாகூட பேசினேன்..."

"அடடோ... எப்போ... இப்பவா?"

"சித்தி குழந்தையை ஆசீர்வதிக்க விரும்புவாங்கன்னு தெரியும். ஆனா, ஐ.எஸ்.டி. வசதி இங்க இல்ல. 'கால் புக்' பண்ணினா ஓரிரு மணி நேரமாகும். அதான் உன்னைக் கூப்பிடலை..." அவன் விளக்கினான்.

"பரவாயில்லை... எப்படி இருக்காங்க?"



"நல்லா இருக்காங்க. நீ சாப்பிட்டியா?"

ஏனோ அக்கேள்வி அவளை நெகிழ்த்தியது.

இனி இப்படி கரிசனையாய் தன்னை விசாரிக்க ஆளில்லை என்று நினைத்திருந்தாளே...

"தாங்க்ஸ்... அனுவுக்குச் சாப்பாடு தந்து..."

"ஒரு தோசை என்ன பிரமாதம்? ரெண்டு பேரும் சில பெட்டிகளை எல்லாம் பிரிச்சுப் பார்த்தோம். அனுவுக்கு இந்த சரிகைக் குண்டு, மணி எல்லாம் பிடிச்சிருந்தது. உங்க ஹால்ல இதையும் தொங்கவிடலாம்னு எடுத்து வந்தேன்..."

"எப்படி... எதுக்கு?"

"விருந்துக்குத்தான். 'செலோ-டேப்' எடுத்து வந்தேன். அஞ்சு நிமிஷ வேலை."

பலூன்களை கொத்தாய் கூரையிலேயும், ச ல் கம்பிகளிலேயும் கட்டிவிட்டவன், சுவர்களில் ச அலங்காரங்களை ஒட்ட, ஹால் அமர்க்களமாகியது.

"ஹா... ஜோரா இக்குது... இல்ல சித்தி?"

"ஆமா..."

அனுவை இத்தனை உற்சாகமாய் இதுவரை பார்த்ததில்லை.

மறுநாள் காலை முகமெல்லாம் பூவாய் தன் சிறு வீட்டினைச் சுற்றிப் பார்த்த அனு 'கிரீச்'சிட்டாள்!

"என்ன... என்னாச்சு...?"

"சித்தி... அதோ பாருங்க."

தையல் இயந்திரத்தின் பக்கமாய் குட்டி விரல் நீண்டது.

அதன் 'பெடல்' மீது மொத்த இடத்தையும் அடைத்தபடி உட்கார்ந்திருந்தது ஒரு பொம்மைக் கரடி!

'ஹைய்யோ... 'டெடி பேர்' சித்தி!'

"அட... ஆமா!"

"தாங்க்ஸ் சித்தி... ரொம்ப பிடிச்சிருக்கு" குதித்து ஓடிய அனு 'புசுபுசு'வென்றிருந்த அப்பொம்மையை அள்ளித் தூக்கினாள்.

முகத்தை அதன் ரோம முகத்தோடு ஒட்டி வைத்து முத்தமிட்டாள்.

"ஹை... கண்ணாடி கண்ணு... ச்சோ... பட்டா இருக்குதே?" இறுகக் கட்டி கொஞ்சினாள்.

"ஆனா இதெப்படி இங்கே வந்துச்சு அனு?"

"ஹை...! பெரியம்மா மாதிரி 'டுப்'பு விடாதீங்க சித்தி. அவங்கதான் கிறிஸ்மஸ் ராத்திரி 'பைன் டிரீக்குக் கீழ நெய்ய பொம்மல்லாம் வச்சுட்டு... 'நானு வக்கிலியே... கிஸ்மஸ் தாத்தா வச்சார் போல'ன்னுவாங்க!"

விழிகள் இரண்டு நட்சத்திரங்களாய் மின்ன— குலுங்கிச் சிரித்தாள் குழந்தை.

"இல்லை அனு... நிஜமாவே நான் வைக்கலை."

இது வெடிகுண்டோ என்றுகூட பரணிக்குள் ஒரு பய சந்தேகம்!

"இது 'பர்த்–டே' தாத்தா வச்சது" – என்றது பாஸ்கரன் குரல்!

"ஹை! அங்கிள்... நீங்களா... தாங்க்ஸ்."

"இது ஜாஸ்தி விலையிருக்குமே?" தடுமாறினாள் பரணி.

"இருக்கட்டுமே! அனுவுக்கு எப்பவும் சிறந்தவைதான் பிடிக்கும்."

"எப்போ அங்கிள் வச்சீங்க... ராத்திரியா?"

"ம்..."

"நீங்க கொண்டு வந்ததை நான் பாக்கலியே?"

"சாயந்திரமே ஒரு கவரில் சுத்தி வீட்டுக்கு வெளியே வச்சிருந்தேன். அப்புறம் நைசா 'டெடி'யே உள்ளே புகுந்திருக்கும்!"



"அப்படியா?"

டெடிக்கு முத்தமிட்டாள் அனு.

"பிறந்த நாள் வாழ்த்துகள் அனு."

குனிந்தவன்— குழந்தையை முத்தமிட்டான்.

இன்னும் சவரம் செய்யாத கன்னங்கள். கீழ் முகத்தில் கருப்புப் புல்லாய் ரோமம் மொட்டு விட்டிருந்தது. சற்றே கலைந்த கேசமும், ஓரிரு பித்தான்களே பொருத்தப்பட்ட சட்டையிலும்கூட குறையாத அவனது கவர்ச்சி!

"சரி... எப்போ குளிச்சு புதுசிலே ஜொலிப்பீங்க அம்மணி?"

"எட்டு மணி ஆவுமே அங்கிள்."

"சரி, அப்ப வரேன்— எனக்கும் சேர்த்து மசால் தோசை."

"ம்கூம். இன்னைக்கு தக்காளி ஊத்தப்பம்— அப்புறம் கேக்!"

"நேத்திலிருந்தே வாசனை பிடிச்சிட்டுக் கிடந்தேன்!" பெருமூச்சு விட்டான்.

ஒன்றரை மணி நேரம் கழித்து— அவன் வந்து சமையல் அறையில் தட்டோடு அமர்ந்தது பரணிக்குப் பிடித்திருந்தது.

போன பிறந்த நாளின்போது அம்மா இல்லை. தவறி இரு மாதங்கள் ஆகியிருந்தன. ஆனால், தேற்ற பெரியம்மா இருந்தார்.

இம்முறை அவர்களும் இல்லாது வெறிச்சோடிக் கிடந்திருக்கும்...

இவன் இருப்பது ஒருவகையில் ஆறுதல்... ஆதரவு.

தவிர, அனுவின் முகத்தில்தான் எத்தனை பரவசம்!

சீண்டலும், சிரிப்புமாய் காலை உணவு நேரம் அமர்க்களப் பட்டது. கைகழுவியவன், பாக்கெட்டிலிருந்து சிறு டப்பாவைத் திறந்தான்.

"இன்னொரு பரிசு! ஹை...!"

"ம்... போட்டுக்கோ!"

அவன் விரல்களில் மெல்லிய பொன் சரடு!

ஆம்... ஆங்காங்கே தங்கக் காசுகள் கோர்த்த செ
சங்கலி.

"பாஸ்கர்... இதென்ன?"

பதற்றமாய் கேட்டாள்.

"செயின்... அனுவுக்கு."

"அவளுக்குத்தான் காலையிலே பரிசு தந்தாச்
இத்தனை விலை உசந்த பரிசெல்லாம் வேணாம்... தப்பு"

"ஸாரி மேடம் பரணி! இந்தப் பரிசு என்னுதில்ல
பெரியம்மாவோடது."

"ஆனாலும்... அவங்க எப்படி?"

"நான் புறப்படும் முன்னரே அமெரிக்காவிலிருந்து உத்த
வந்தாச்சு. ரெண்டு பவுனுக்கு அனுவுக்கு ஏதாவது வாங்
போகச் சொல்லி. ஆக, சென்னையிலிருந்து வரும்போது
இதை வாங்கி வந்தாச்சு."

"ஆனா இப்ப... வேணாம்..."

"பள்ளிக்குப் போட்டுக்க வேணாம், சரி! ஆனா, விருந்
போது போட்டுக்கணும். நாலு 'போட்டோ' எடு
பெரியம்மாவுக்கு அனுப்ப வேணாம்? பிறகு பத்திரமாய் கழ
வச்சிட வேண்டியது..."

"ஹை! என்னை 'போட்டோ' எடுப்பீங்களா அங்கிள்?"

"பின்னே– சரி. இப்ப உன்னை நானே 'ஸ்கூல்'ல கொண்
விடவா?"

"இல்ல... அவளுக்கு 'ரிக்ஷா' வரும்."

"வேணாம் சித்தி. இன்னைக்கு நான் காரிலேயே போறே
கையாட்டிவிட்டு அவனோடு குஷியாய் கிளம்பியது அனு.



கூடவே, பாஸ்கரும் இவளை நோக்கி கைவீச, பரணி வெட்கத்துடன் கால்வாசி கையாட்டலுடன் விடை தந்தாள்.

மாலை வைபவம் வெகு உல்லாசமாய் போனது.

குழந்தைகளுக்காய் பல விளையாட்டுகளை பாஸ்கரன் நடத்தினான். ஜெயித்த, தோற்ற அத்தனை குட்டிகளுக்கும் சின்ன சின்ன பரிசுகள்.

அவனது 'டேப்'பில் தாளமிட வைக்கும் இசை.

கூடவே, குஞ்சு குரல்களும் சேர்ந்து பாடின.

"இன்னொரு 'கேக்' ஆன்ட்டி" என்று கேட்டுச் சாப்பிட்டன.

"ரொம்ப வயிற்றை நிரப்பிடாதீங்க குட்டீஸ். ஐஸ்கிரீம் வாங்கி வச்சிருக்கேன்– அதுக்கும் வயித்துலே கொஞ்சம் இடமிருக்கட்டும்"

"ஹை!" பச்சரிசி பற்களை மொத்தமாய் காட்டி, பாஸ்கரன் நீட்டிய ஐஸ்கிரீமை ஆளுக்கு இரண்டு, மூன்று என்று காலி செய்தன குட்டிகள்.

நிமிடத்திற்கு ஒருமுறை 'காமிரா' கண்சிமிட்டியது ஒளியாய்.

கைகோர்த்து ஆடிப்பாடி, குதித்து ரகளை செய்து சற்றே அவை களைத்த நேரம்– அவர்களைக் கிளப்பினான்.

"ஆன்ட்டிக்கு நன்றி சொல்லிட்டு காரிலே ஏறுங்க குட்டீஸ். கொண்டு போய் அவங்கவங்க வீட்டுல விட்டுடறேன்."

சொகுசான கார் பயணம் மேலும் அவர்களுக்கு குதூகலம் போலும். மீண்டும் குதித்தார்கள்.

இன்று இவளுக்கு அதிக வேலையே இல்லை. அத்தனையும் தன் பொறுப்பு போல பார்த்துக் கொண்டான்.

நெஞ்சு நன்றியால் நிரம்பியது.

'இனி அவனிடம் சற்று இன்முகம் காட்டியே பேச வேண்டும்–





என்ற முடிவுடன் அவள் தூங்கப் போனாள். மறுநாள் அவன் வைக்கப் போகும் வேட்டினை அறியாமல்!

**ராணி முத்து** **சந்தா விவரம்**

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

**வெளிநாடுகள்**

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 1225 |
| ஆறு மாதம் | ரூ. 615 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

மேலாளர்,
"ராணி முத்து",
சென்னை–600 007.

## 6

**சு**வர்களில் மின்னிக் கிடந்த அலங்காரங்களைக் கவனமாய் கழற்றி வைத்தாள். வீட்டைப் பெருக்கிக் கழுவினாள்.

குழந்தைகள் ஆடிய வீடு முழுக்க மண்ணும், குப்பையுமாய்...

வீடு 'பளிச்'சென ஆன பின், தானும் குளித்துவிட்டு தைக்க உட்கார்ந்தாள்.

இனி முழுமூச்சாய் இதே வேலைதான்.

போனவாரம் செலவு அதிகம்.

இனி அதை ஈடுகட்ட வரவு வேண்டும். முதுகு வேலையில் ஒடிந்தால்தான் வரவு.

"பரணி..."

"ராணியா? வாயேன். சமையல் ஆச்சா?"

"இனிமேதான். ரெண்டு பச்ச மிளகா தர்றியா?"

"சமையல் மேடையில் இருக்கு, எடுத்துக்கறியா? கழுத்து பக்கம் ரவிக்கை வெட்டுறேன். இப்ப எழுந்தா கை பிச விலகிடும்..."

கத்திரியை வளைவாய் ஓட்டியபடி சொன்னாள்.

"சரி... நேத்து நீ செஞ்ச கேக், பலகாரமெல்லாம் ஜோரு..."

"அனுவுக்காக, அவ சந்தோஷத்துக்காக , 'வீட்டோடு ஒரு பாயசம் வச்சாப் போதும்'னுதான் இருந்ததேன். ஐயா போன வருஷம்ல? ஆனா, பெரியம்மா கண்டிப்பாய் ஏதேனும் நல்லபடி செய்யுன்னு சொல்லிட்டுப் போயிருந்தாங்க. ஞாயிற்றுக்கிழமையுமாப் போச்சா... அதான்."

"பாசு ஐயா வந்த பிறவு அனுவுக்கு தனி குஷி... என்னா சிரிப்பு சிரிக்குது"

"ம்ம்..."

"அதுக்கு மட்டுமா?" –ராணி இழுத்தாள்.

"ஆ... என்ன?" இவள் இதயம் பதற்றமாய் சிறகடித்தது!

"அர்ச்சனா பொண்ணுக்கும் குஷிதாங்கறேன்! தினத்துக்கும் நாலு தடவ போனு போடுது. இப்ப காலையிலேயே வந்து உட்காந்திடுச்சு."

"கா...கார் சத்தம் கேக்கலியே?"

"கமுக்கமா முன் வாசல்லியே நிறுத்திப்புடுச்சே... 'பாசு பாசு'ன்னு வருஷக்கணக்கா பழகினாப்பல ஒட்டுது."

"ம்ம்..."

பரணிக்குக் கேட்கப் பிடிக்கவில்லை. கேட்காதிருக்கவும் மனமில்லை.

"முறைகேடெல்லாம் பார்த்தபடி சமைச்சுக் கொட்டணும்னு எந்தலையெழுத்து."

"ஜாதி, மதம் வேறெங்கறதையா முறைகேடுங்கற?"

"அதில்ல பரணி. இது கல்யாணமான பொண்ணு. இங்க வந்து தனியே இருக்கற ஆம்பளைகிட்ட பொழுதன்னிக்கும் கிடக்கலாமா?"

அயர்ந்ததில் ஊசி, விரல் நுனியுள் ஏறியது.



"ஸ்ஸ்... ஆ...!"

"பாத்தியா, நச்சுங்குதுல்ல? இந்த அர்ச்சனா வாக்கப்பட்டுப் போனது சிவகாசியில் பெருங்குடும்பம். ஆனா, இந்தப் பொண்ணு அலட்டலுக்கும்... அந்தக் குடும்பத்து கட்டுத் திட்டத்துக்கும் ஒத்துப் போகல. ஊரு, உறவு எதுவுமே சேரல. இவ முரண்டுப் பண்ணிப் பாக்க, புருஷங்காரன் 'போடீ'ன்னுட்டான். ஆக, இங்க அப்பன் வீட்டில் வந்து இருந்துகிட்டு 'நோட்டீஸ்' வுட்டிருச்சு. சீக்கிரத்தில் 'டைவர்ஸ்' ஆயிடுமாம். அது வரைக்குமாவது கம்முனு கிடக்கக்கூடாதா?"

"எனக்கு... எனக்கிது நாள் வரை எதுவுமே தெரியாதே ராணி?"

"துணி தைக்க வரும்– 'புஸ்'ன்னு போவும். நமக்கென்னன்னு இருந்தேன். அங்க, இங்க சுத்துன நாகம் தலைமாட்டுக்கு வந்த பிறவுதானே கம்பெடுக்கறோம்? நம்ம பெரியம்மா இருந்த வூட்டுல இப்படியொரு ராங்கிக்காரி வந்து ராச்சியம் பண்ணுனா? நட்சத்திர பங்களா அருளே போச்சு போ..." சலித்தாள் ராணி.

"அர்ச்சனா ஏன் இங்க வரணும்?"

"பின்ன? பங்களா இப்ப பாசு ஐயாவோடது. இது பாசுவக் கட்டிக்கிட்டா வேறெங்க போவும்?"

"புரியலை... எனக்கு எதுவும் புரியலையே?"

ஊசி குத்தின விரல் தெறித்தது– இதயத்திலும் விநோத வேதனைகள்.

"பாசய்யா உங்கிட்ட ஏதும் சொல்லலையாக்கும்?"

"இல்லையே..."

"அப்பப்ப சாப்பாட்டுக்கு இங்க வந்திடுது– சகஜமாப் பேசிப் பழகுதே?"

"ஆனா... பங்களா இப்ப அவருதுன்னு மூச்சுவிடலியே?"

"அம்மாவோட பொண்ணுங்க ரெண்டு வெளிநாட்டுல

ஆண் வாரிசு இல்ல. பாசு பெரியய்யாவோட தம்பி மவன். இவர்கிட்ட சொத்து இருந்தாத் தேவலை. இவரும் வேணாம்னுட்டா வித்துப்புடலாம்னு யோசனை."

'இத்தனை யோசனைகள் நடந்திருக்க, பெரியம்மா எதையும் தன் காதில் போட்டு வைக்கவில்லையே?' –பரணியின் மனசு சங்கடப்பட்டதா அல்லது தங்களது குழப்பங்களை ஏன் அநாவசியமாக இவள் தலையில் ஏற்ற வேண்டும் என்ற நினைப்பா?

"ஐயா இருந்தப்பவே இது பத்தி பேச்சு வார்த்த நடந்துச்சாம். எழுவது வயசுக்காரங்க எட்டு, பத்து அறைகளோட, சுத்துமுத்து இத்தினி இடத்தோட வீட்டைப் பராமரிக்கறது லேசா என்ன...?"

சிரமம்தான், அவர்களது இந்த சிந்தனா போக்குக் தெரிந்தால் பரணிக்கு தன் நிலைமை குறித்த அச்சம் எழும் என்றே பெரியவர்கள் இப்பேச்சைத் தவிர்த்திருக்கலாம்.

"பாசுய்யா இங்கே ஏதோ யாவாரம் ஆரம்பிக்னுங்கற நோக்கத்தோட வந்திருக்குப்போல. இந்த வீட்ட எடுத்துக்கோன்னுட்டாங்க. பாசுவும், 'பெருந்தொகையாத் தந்துடறேன். அக்காமாரு பிரிச்சு எடுத்துக்கட்டும்'ங்கற மாதிரி சொல்ல... ஓரளவு எல்லாந் திரண்டு வந்த சமயந்தான் பெரியப்பா போயாச்சு..."

"இதெல்லாம் உனக்கு எப்படி தெரியும் ராணி?"

"பங்களாவிலதான் இருக்கேன். வீட்டை விலைக்குக் கேட்டு சதா யாராவது வந்தபடிதான்– நாந்தானே டீயும், பிஸ்கெட்டும் கொண்டு போவணும்? பக்கத்து 'பாக்டரி' முதலாளிகூட இது விசயமா வந்தாரு. ரியல் எஸ்டேட்டு ஏஜெண்டுகளும் வரப்போகன்னு இருந்துச்சே! இங்க பேப்பரு போட வருமே மாரிமுத்து..."

"ம்ம்..."



"அவனும் 'இதாமே... அப்படியாமே'ன்னு விவரஞ் சொல்லுவான். பிறவு அவங் குடிகாறன்ரது தெரியவும் பேச்ச முறுச்சிட்டேன். அப்படிப்பட்ட ஆளை நம்பக்கூடாது. நாம சொல்லாததையும் திரிச்சுப் பரப்புவான். பிறவு, பாசுய்யா இந்த இடம் வேணுங்கவும், ஐயா 'இனி மூச்! வெளியே விக்கிற பேச்சே இல்லை'ன்னுட்டாங்க..."

ஆக, தான்தான் ஏதும் அறியாத மரமண்டை.

"என்ன பரணி, ஒரு மாதிரியாப் போச்சு முகம்?"

"எதுவும் எனக்குத் தெரியலியேன்னு பார்த்தேன். அப்ப இனி நட்சத்திர பங்களாவின் முதலாளி பாஸ்கரன்... வாடகைப் பணத்தை அவர்கிட்டத்தான் தரணும். இல்லியா?"

"உன் நொச்ச தாங்காத பெரியய்யா மனசில்லாம உங்கிட்ட ஒரு தொகை வாங்கிட்டிருந்தாங்க..."

"அதையே இப்ப இவர்கிட்ட நான் தந்துடறதுதான் முறை?"

"அந்த முதலாளி தோரணையெல்லாம் பாசுய்யாகிட்ட கிடையாது. பெரிய ஐயா குணமேதான். என்ன கொஞ்சம் குறும்பு! ஆனா, இந்த அர்ச்சனா தேடிவந்து வழியறதுதான் எனக்குப் பிடிக்கலை. வயசுப் பசங்க ஜாக்கிரதையா இருக்கவேண்டிய விவகாரம்ல?"

"அவரொண்ணும் விவரம் தெரியாத பையன் இல்லையே?"

"ஆனாலும், வூட்டுல பெரியவங்க இருந்தாத் தேவலை. அப்படி இப்படித் திரும்புனா நேராத் தட்டி நிமுத்திவுடுவாங்க."

"இவருக்கு வயசு முப்பதைத் தாண்டியாச்சு ராணி. சென்னையில 'ரியல் எஸ்டேட்' வியாபாரத்துல நல்ல லாபம் பார்த்தவர். பட்டணத்தில் இவர் பாக்காத, பழகாத பொண்ணுகளா?"

"ஆங்... அப்படியும் சொல்லிடாத பரணி. அங்க நட்சத்திரக் கூட்டமா நிறைய குட்டிங்க– பட்டும் படாத போயிரும்.

இங்க ஒத்தையா நின்று இதை சிமிட்டுனா சிக்கினாலும் சிக்கிக்குவாருல்ல?"

"அதெல்லாம்... நம்மை மீறின விஷயம்."

"நா பெரியம்மாக்கு ஒரு கடுதாசி எழுதி வுடலாம்னு இருக்கேன். விலாவாரியா இல்லாட்டியும் சும்மா ஒரு ரப்பா..."

"அம்மா அங்கு நிம்மதியா இருக்கட்டுமே ராணி..."

"பத்து ரூவாக்கு ஏதோ வெளிநாட்டுத் தபால் 'கவரு' இருக்காமே? அடுத்தாப்பல மதுர போவும்போது எனக்கொண்ணு வாங்கிட்டு வந்துரு..." கறாராய் உத்திரவிட்டாள் ராணி.

"அம்மாவுக்கு நான் பொதுவாய் ஒரு 'லெட்டர்' போட்டாச்சு. இன்னுமொரு 'கவர்' இருக்கு. தரேன்."

அன்று தைக்க வேண்டியதில் பாதி வேலைதான் முடிந்தது.

மனம் வேலையில் ஒன்றவில்லை.

ஆக 'நட்சத்திர பங்களா' இப்போது பாஸ்கரனது சொத்து.

விரைவில் அர்ச்சனா, அவனது மனைவியாய் இங்கு குடியேறக்கூடும்!

பிறகும் தான் இங்கேயே தங்குவது சாத்தியமில்லை.

ஒரு வாரப் பழக்கம் திருமணம் வரை போகுமா என்ன?

அது ராணியின் யூகம்.

ஆனால், இனி தான் இங்கு இருக்க– பழைய சந்தோஷம், நிம்மதி இருக்காது. அது நிச்சயம்!

எனவே, மதுரைக்கு சமீபமாய் வேறு ஒரு வீடு பார்க்க வேண்டியதுதான்.

அனுவிற்கு வேறு புதுப் பள்ளி தேடணும்.

தெரியாத அண்டை, அயலுடன் பழக நேரும்.

நினைப்பே அயர்ச்சி தந்தது.

நேரம் போகப் போக ராணி சொன்ன செய்தி அவளை



மேலும் குழப்பியது.

பாஸ்கரனும், அர்ச்சனாவிடம் குழைவது போலத்தானே பழகுகிறான்?

இருக்கும்.

இத்தனை அழகும், பணமும், சாமார்த்தியமும் உள்ள ஆணுக்கு பெண்களிடம் பலவீனம் இல்லாமல் போகுமா? அதுவும் அழகி ஒருத்தி வலிய வந்து விழும்போது...?"

பாஸ்கரனைப் பற்றிய தன் சிறுவயது ஞாபகங்கள் ஒன்றும் அத்தனை இனிமை இல்லையே...

சதா இவளை வெறித்துப் பார்ப்பதும், சீண்டுவதும், அழுந்தக் கிள்ளி கை பற்றுபவனுமாய்த்தானே நினைவுகள்?

ஒரு கிறிஸ்துமஸ் நாளின்போது அலங்காரத் தோரணங்களை எடுக்க அவனோடு நிலவறைக்குள் சென்ற நினைவு புகைபோல... அப்போது தனக்குப் பதிமூன்று வயதிருக்கும்... ஏதேதோ பேசினான்... அவள் புரிந்தும் புரியாமல் மூச்சிரைக்க படியேறி ஓடிப் போனாளே...?

அறியாத வயதிலேயே ஊடுருவும் அவன் விழிகளுக்கு அஞ்சிப் பதுங்கியிருக்கிறாள்.

ஒரு பெண் நம்பிப் பழகக்கூடிய நல்லவனில்லை இவன்.

வந்தவுடன் அத்தனை ஒட்டிக்கொண்டதில் இருந்தே தெரியவில்லையா?

பசித்தவனுக்கு பழங்கஞ்சியே போதும். ஆக, முதலில் தன்னிடம் சற்று குழையடித்திருக்கிறான்.

இப்போது நெய் சோறாக அர்ச்சனா! ஆக, இனி அவனு உபத்திரவம் இராது– நிம்மதி.

இப்படி நினைத்த பிறகும் மனதில் நிம்மதியில்லை.

புரண்டு தவித்தது. தனக்கே தனக்கான பொருள் ஒ கைநழுவிப் போவது போன்ற ஊமை சோகம்... ஏன்?

புரியவில்லை.

சாயங்காலம் வீட்டின் முன்னே அனு பந்து விளையாடிய நேரம். ஓரமாய் அடர்ந்திருந்த கனகாம்பரப் புதரிலிருந்து பூக்களைப் பறித்துத் தொடுத்தாள் பரணி.

தலைவாரி தனக்கும், அனுவிற்குமாய் பூச் சூட்டிக் கொண்டாள்.

"ஐய்... ஆரஞ்சு ஸாரி... ஆரஞ்சு பூ... அழகாயிருக்கு சித்தி."

"தாங்க்ஸ் குட்டி– வர்றியா, பாஸ்கர் அங்கிள் வீடு வரை போயிட்டு வரலாம்?"

"ஓ... கையில அதென்னது?"

"ம்ம்... கவர். இதிலே போன மாச வாடகை வச்சிருக்கேன்."

அனு முன்னே ஓடியது.

"உஷ்... ஓடாதே குட்டி. அங்கே வீட்ல அர்ச்சனா ஆன்ட்டி இருந்தாங்கன்னா நாம திரும்பிடணும். இல்லைன்னா பணத்தைக் கொடுத்துட்டுத் திரும்பிடலாம்."

வீட்டின் முன்னே 'கார்' இல்லை.

படியேறினாள்.

இதுதான் அனுவைப் போன்ற பிஞ்சுப் பருவத்திலிருந்தே ஆடிப் பழகிய வீடு. சன்னல் கிரில்களில் நட்சத்திர வடிவம்.

தன் பிஞ்சு விரல்களால் அதைப் பற்றித் தொங்கியதுண்டு.

மாடி முகப்பிலும்கூட பெரிய சிமெண்டு நட்சத்திரம்.

வீடு முழுக்க பவள மெழுகுத் தரை– பாதங்களுக்கு அடியில் 'குளுகுளு'வென வழுக்கும்.

கடும் கோடையில்கூட உள்ளே அனல் அடிக்காத வகையில் நல்ல உயரத்தில் தேக்கு மர உத்திரங்கள்.

இனி இங்கு அவள் உரிமையாய் வளைய வர முடியாது.

கிறிஸ்துமஸ் காலம் இப்பெரிய வீட்டினைப் பார்த்து



பார்த்து அலங்கரிக்க முடியாது.

மூங்கில் நட்சத்திரம் செய்து, நீலக் கண்ணாடித் தாள் ஒட்டி உச்சி மாடியில் தொங்க விட்டுவிட்டு– எத்தனைத் தொலைவிற்கு அந்நீல நட்சத்திரம் ஒளிர்கிறது என்பதற்காய் இரவு நெடுஞ்சாலையில் நடந்த அனுபவம் எல்லாம் இனி இனிய கனவுகள்தான்...

கதவைத் தட்டினாள்.

பைஜாமா, குர்தாவுடன் கதவைத் திறந்தது அவன்தான்.

"அடடே..... எங்கேடா நாள் முழுக்க இவளைக் காணுமேன்னு என்னைத் தேடி வந்திட்டீங்களா பெண்களே?"

அவனது ஆரவாரமான வரவேற்பு ஏனோ வெறுப்பாக இருந்தது.

"இல்லை... ஒரு விஷயமாய்..."

"உள்ளே வாங்க" தலைசாய்த்து வரவேற்றான்.

உள்ளே போய் அமர்ந்தாள். அதிக நேரம் இங்கிருப்பது உசிதமில்லை.

பண உறையை நீட்டினாள்.

"என்னதிது... காதல் கடிதமா பரணி?"

இயல்பாய் அவன் கேட்க, இவள் 'குப்'பென முகம் சிவந்தாள்.

இதென்ன குழந்தையின் முன் தகாத பேச்சு?

உடம்பே நடுங்குவதான அவதியில் நெளிந்தாள்.

"சேச்சே... இது போன மாசத்துக்கான வாடகை..."

"அதை ஏன் எங்கிட்ட தரணும் பரணி?"

"வீட்டை நீங்க வாங்கியாச்சாமே... அதான்."

"யார் சொன்னா?"

"நீங்க சொல்லியிருந்தால் முறையாய் இருந்திருக்கும்.

ஆனா விஷயத்தை எத்தனை நாள் மூடி வைக்க முடியும்? சுரத்தற்ற குரலில் பேசினாள்.

"அப்போ உனக்கு விவரமெல்லாம் தெரிஞ்சு போச்சு. அப் நேரே விஷயத்துக்கு வருவோமே பரணி. எப்போ அந்த அதாவது நீ இருக்கும் வீட்டைக் காலி பண்ணப் போறே?"

ரணத்தில் உப்பு தூவினான்.

"சீக்கிரமே! வேற... வேற வீடு பார்த்தவுடனே..."

தடுமாறினாள். காலுக்கடியில் கிடக்கும் பாயை உருவினா அலுங்காமல் நிற்க முடியுமா? ஆனால், அடுத்து அவ சொன்னது அவளை உச்சந்தலையில் அடித்து வீழ்த்தியது.

"வேற வீடா? ஏன் இந்த நட்சத்திர பங்களா உனக்கு பிடிக்காதா பரணி? இது உனக்குப் பிடிச்ச வீடு. நீ நினை தெரிஞ்ச நாளாய் புழங்கின வீடில்லையா?"

புரியாமல் ஏறிட்டாள்.

"இங்கேயே குடியேற வேண்டியதுதானே? இங்க நீயும், நானும் கணவன்– மனைவியாய் வாழறதைவிட பெரியம்மாவிற்கு வேறே சந்தோஷம்?"

என்ன சொல்கிறான் இவன்?

மேலே ஓடிய உத்திரக்கட்டையில் ஒன்றிரண்டு தலையில் இறங்கியது போலிருந்தது.

கண்ணை இருட்டியது.

## 7

அவள் தோள்களைப் பற்றி யார் இத்தனை முரட்டுத்தனமாய் உலுக்குவது?

இவள் மாத்திரம் ஒரு புளியமரமாய் இருந்திருப்பின் ஒரு பழம்



கிளைகளில் தங்கியிராது.

"ஐயோ... வலிக்குது..." முனகினாள்.

முகத்தில் 'சில்'லென்று தண்ணீர்த் துளிகள்.

விழிகளைத் திறந்தாள்.

எதிரே அவன்.

இவன் ஏதோ சொல்லவும்தான் மயங்கி விழுந்தோம் என்பது நினைவிற்கு வந்தது.

ஏறக்குறைய எட்டு, பத்து ஆண்டுகளுக்கு முன் இதேபோலொரு அனுபவம் நேர்ந்ததோ...? நினைவு தெளிவாயில்லை.

ஆனால், பாஸ்கர் இந்த ரீதியில் ஏதோ பேச, இதேபோல வியர்த்து பதறி நிலவறையின் படிகளேறி ஓடினாளே...

உதடுகளில் கிஸ்மிஸ் பழம் போன்ற உலர்வு...

பேச்சே வரவில்லை.

"இதைக் குடி..." அவளது உதட்டில் தம்ளரின் விளிம்பை பொருத்தினான்.

சில்லென்ற எலுமிச்சம் பழச்சாறு உள்ளிறங்கியது.

தலையில் சற்றே தெளிவு.

அனுக்குட்டி விழியெங்கும் பயமாய் நின்றது. இங்கிருந்து முதலில் கிளம்பவேண்டும்.

"சித்தி..."

"ஒண்ணுமில்லை அனு... லேசாய் தலை சுத்துச்சு, அவ்வளவுதான்."

"அங்கிள் அப்படி உலுக்கலைன்னா நீயும் செத்துப் போயிருப்பியா... சித்தி?"

"சேச்சே... வா, போகலாம். எனக்கு ஒண்ணுமில்லை."

"கொஞ்ச நேரம் உக்காரு பரணி. நானே கொண்டு போ

விடறேன்" —என்றான் கரிசனமாய்.

இவனிடம் இனியென்ன பேச்சு?

காலை முழுதும் ஒருத்தியோடு சல்லாபித்துவிட்டு, மாலையில் மற்றொருத்தியுடன் சாகசம் பேசும் கயவன்!

அவள் பார்வை இகழ்ந்தது.

"தோ பார் பரணி. நாந்தான் அவசரப்பட்டுட்டேன். யார் என்ன சொன்னா? உனக்கு நான் இந்த வீட்டை வாங்கின விவரம் எப்படி தெரிய வந்துச்சு? பெரியம்மாவின் கடிதம் வந்திருக்கும்னு நினைச்சேன்."

"இல்லை... ராணி சொன்னா..."

"ஆஹா... அரைகுறை அறிவு ஆபத்தாச்சே! முதல்லே நீ எனக்கு வாடகை தரவேண்டிய நிலையில் இல்லை. ஏன்னா, அந்த 'அவுட்—ஹவுஸ்' உன்னது. அதைச் சுற்றியுள்ள 25 சென்ட் நிலம் உன் சொத்து...."

போகும் முன் நிர்மலாக்கா அப்படி ஏதோ சொன்னாள்தான். ஆனால், பரணி அதை உபசார வார்த்தைகளாய்த்தான் எடுத்துக்கொண்டாள்.

"அப்படி ஏதும் பெரியம்மா எங்கிட்ட சொல்லலை."

"பெரியப்பாவின் உயில் அப்படித்தான் சொல்லுது. இப்ப உடனே உனக்கிந்த விவரங்கள் அவசியமில்லைன்னு யாரும் சொல்லலை. நீயும் அவங்களுக்கு ஒரு மகள் போலத்தான். நான் இங்கே வர்றதை நம்பித்தான் உன்னை இங்கே விட்டுப் போயிருக்காங்க."

ஏனோ இவளுக்கு அழுகையாய் வந்தது.

"இப்ப 'ரியல் எஸ்டேட்'டில் அதிகப் பணப்புழக்கம் இல்லை. அப்படியே இருந்தாலும் எனக்கு அந்தப் பட்டண வாழ்க்கையும், அவசர ஓடல், சாடல் எல்லாம் அலுத்திருச்சு."

விறைப்பாய் பார்வை பதித்து தரையிலேயே



அமர்ந்திருந்தாள்.

"இங்கே ஒரு 'ஐஸ்கிரீம் யூனிட்' ஆரம்பிக்க திட்டம். இங்கே உற்பத்தி செய்தால் மதுரை தவிர தெற்கு பகுதிகளுக்கு விநியோகம் செய்றது சுலபம். இப்போ டிரை—ஐஸில் பாக்கிங் செய்து ரெயிலில்தான் ஐஸ்கிரீம் கொண்டு வரப்படுது. சிங்கப்பூருக்கு நான் போனது சில மெஷின்களைப் பார்த்து வாங்கத்தான். ராட்தச இயந்திரங்கள். இத்தனை லிட்டர் பாலுக்கு இந்த அளவில் சீனி, முட்டை, எசென்ஸ்னு நாம கணக்காய் சேர்த்தால் போதும். பத்து நிமிடம் உறுமிட்டு சமர்த்தாய் ஐஸ்கிரீமைக் கக்கிடும்..."

"இங்கியா அங்கிள் ஐஸ்கிரீம் செய்யப்போறம்?"

அனுவிற்கு இப்போது பயம் போய் ஆச்சரியம்தான்.

"ஆமா குட்டி. அந்த கிரீம்ம அகல அலுமினியத் தட்டுகள்ல நிரப்பி, ஐஸ் பெட்டிகள்ல வச்சா ஐஸ்கிரீம் தயார்!"

மறுபடி அவன் பார்வை தன் மீது பதிவதை பரணியால் உணர முடிந்தது.

"தவிர, 'கோன்' தயாரிக்கும் சின்ன 'யூனிட்' ஒன்றும் போட திட்டம் பரணி. ஐஸ்கிரீமை நிரப்பி சாப்பிட வேபர் கோன். அந்த மெஷின் விலை ஓரிரண்டு லட்சம்தான். இரண்டு வாங்கிப் போட்டா சிறுதொழில் போல சுத்து வட்டாரத்தில இருக்கிற சில குடும்பங்கள் பிழைக்கும்."

"ம்ம்..."

அவளை ஒரு பொருட்டாய் மதித்து அவன் இத்தனை சொல்ல, கல்லுளித்தனமாய் இருக்க முடியாமல் முனங்கிவைத்தாள்.

"இந்த வீடு பெரியப்பா கட்டினதுன்னாலும், நிலம் என் தாத்தா வாங்கினது. ஆக, பரம்பரைச் சொத்து வேற்றாளுக்குப் போக வேண்டாங்கற எண்ணம் குடும்பத்தில் உண்டு. எனக்கும் இது போல ஆர்வம்... திட்டம் இருந்ததால் என்னால் முடிஞ்ச தொகையை அக்காமாருக்குக் கொடுத்தேன். பெரியப்பா இருக்கு

போதே இந்த முடிவுக்கு வந்தாச்சு..."

விட்டால் வெண்டைக்காயாய் வளவளப்பான் என்று

தோன்ற,

"நான் இதையெல்லாம் கேட்கலியே! இந்த வீட்டுக்கு நான்

வர்றதைப் பற்றித்தான் குழப்பம். என்ன சொன்னீங்க...?" குரலில்

காரம் கலந்து கேட்டாள்.

"கொஞ்சம் இரு."

உள்ளே போனான்.

திரும்பியவன் கையில் ஒரு காகிதம்- முகத்திலும்கூட சற்றே

காகித வெளுப்பு.

"இதை வாசி."

கடிதத்தை இவள் வாசிக்க வாகாய் மடித்து நீட்டினான்.

அது நிச்சயம் பெரியப்பாவின் கையெழுத்துதான்.

சிலந்தி வலை போன்ற ஆங்கில எழுத்துகள். வாசித்தாள்...

"உன்னை நிராதரவாய் தவிக்க விட்டுட்டுப் போக அவங்களுக்கு

மனமில்லை. அதனால் இந்த ஏற்பாடு..." விளக்கினான்.

கடைசி காலம்வரை இவளுக்கு ஒரு கூரை இருக்கட்டுமென

பெரியவர்கள் 'அவுட்-ஹவுசை'த் தந்தது புரிந்தது.

ஆனால் புருஷன்...? அதுவும் இத்தனை மேல்தட்டு வர்க்கத்தில்

ஒருவன்?

ஏழைக்கேற்ற எள்உருண்டை அல்லவா?

அதுவும் அனுவின் மீது பாசம்கொண்ட எளியவன்...

கிடைப்பது அரிதுதான்.

ஆக, திருமண எண்ணமே அற்ற தனக்கு... ஏனிந்தச்

சோதனை?

அவள் சிந்தனைகள் முகத்தில் பிரதிபலித்தன போலும்...

"நாம இருவரும் ஒத்துப் போவோம்னு அவங்களுக்குத்



தோணியிருக்கணும். என் அம்மா- அப்பா இப்ப இல்லை...

அதான் நாம சேர்ந்து இங்கே வாழறது தங்களுக்கு சந்தோஷம்னு

பெரியப்பா எழுதியிருக்காங்க..."

சந்தோஷம். இணையும் தம்பதிகளுக்கு அல்லவா

வேண்டும்?

பார்க்கும் பெண்ணுடன் எல்லாம் உல்லாச, சல்லாபமாய்ப்

பழகும் இவனுடன் இணையும் பெண்ணிற்கு வாழ்வில்

சஞ்சலம்தான் மிஞ்சும்...

"நான் வீட்டிற்குப் போறேன்... மனசு சரியில்லை..."

எழுந்து நின்றாள்.

"காரிலே கொண்டு விடறேன்..."

"ப்ளீஸ் வேணாம்... அம்பது அடி வச்சா வீடு."

விலகி வழிவிட்டான்.

வீடு வந்த பிறகுதான் தன் உடம்பின் அயர்ச்சி புரிந்தது.

துணிபோல கால்கள் தொய்ந்தன.

இருந்ததை அனுவிற்குச் சாப்பிட தந்துவிட்டு, சுருண்டு

படுத்தாள்.

இரும்பாய் கனத்தது உடம்பு... மனசும்கூட! உள்ளே

நூறு வித உணர்வின் கலவைகள். எங்கோ ஒருபுறம் மகிழ்வாய்,

கூட இருந்தது!

நட்சத்திர பங்களாவில்- பாஸ்கரனின் மனைவியாய்... வெல்ல

நினைப்பு தித்தித்தது...!

ஏன்? புரியவில்லை- இதயத்தில் இன்ப படபடப்பு.

ஆனால், மறுகணம் மனசு பல்டி அடித்து, வேறு பலவற்றை

இழுத்துக் கிளறியது.

இன்று காற்று பலம்தான்... மழை வரும் போல.

புரண்டு புரண்டு படுத்தாள். கர்வி அர்ச்சனாவையே வீழ்த்து

பாஸ்கர் தனக்கா?

ஐயாவின் சொச்ச கடிதம் என்னதான் சொன்னது?

திடீரென பெரியவர்கள் இவர்கள் இருவருக்குமாய் ஏன் முடிச்சிட வேணும்?

பல பெரிய இடத்துப் பெண்களே மயங்கி மணமுடிக்க விரும்பக்கூடும் பாஸ்கரன்– பெரியவர்கள் திட்டத்திற்கு ஏன், எப்படி ஒப்புக்கொண்டான்?

ஒருவேளை... 'பரணியைத் திருமணம் செய்துகொண்டால்தான் பையா உனக்கு நட்சத்திர பங்களா!' என்று பெரியவர்கள் ஒரு நிபந்தனை போட்டுவிட்டார்களோ?

சொத்தின் மீதுள்ள ஆசையால் அவனும் சம்மதித்திருப்பானோ...?

'அப்படித்தான் இருக்க வேண்டும்.'

நினைப்பில் உடம்பு கூசியது.

இல்லையென்றால் தனக்கும், அவனுக்கும் இடையே உள்ளது ஏணி– தோணியால் நிரம்பும் சாதாரண இடைவெளியா என்ன?

காற்றில் சன்னல் கதவு படபடத்தது.

காற்று அதிகம் வீசியதில் கொக்கிகள் கழண்டிருந்தன போலும்.

பரணிக்கு உறக்கத்தின்போது சன்னல்கள் விரியத் திறந்திருக்கணும். ஆனால், இப்போது மூடுவதைத் தவிர வேறு வழியில்லை.

எழுந்து சன்னலை நெருங்கியவள், விக்கித்துப் போனாள்.

மொட்டை மரத்தில் ஆடுவது என்ன?

காற்றில் படபடப்பது வெள்ளையாய்... அது என்ன சேலையா... உருவமா? அல்லது இங்கு இருப்பதாய்



தோட்டக்கார தாத்தா அறிவித்த முனியா?

கண்களை இடுக்கினாள்.

மங்கிய நிலவொளியில் எதுவும் தெளிவாக தெரியவில்லை.

வெண்படலம். அருவியாக பொங்கி அடங்கும் கடல் அலையைப் போல... அதைப் பார்த்தபடியே நின்றவளுக்குப் பார்வை மங்கியது.

## 8

மறுநாள் காலை 'இதென்ன முழு அசட்டுத்தனம்?' என்று தோன்றியது.

சூரிய வெளிச்சத்தில் 'தேமே' என்று நின்றது மொட்டை மரம்.

நேற்றிரவு அதன் கிளைகளில் ஊஞ்சலாடியது... என்ன அல்லது யார்?

அது முழுக்க உன் பிரமைதான்– என்று தன்னையே திட்டி அடக்கினாள்.

முன்புபோல வேலை நடக்கவில்லை.

ரவிக்கைகளை வாங்கிப்போக வந்த கடை பையன்கூட அலுத்துக்கொண்டான்.

'என்னக்கா, அஞ்சாறு சோளிக்காய் பத்து மைலு சைக்கிள் மிதிக்க வச்சுட்டீங்களே?' என்று.

"நாலைஞ்சு நாளாய் துணி வெட்டலைப்பா. பத்து இருவதுன்னு வெட்டிப் போட்டா ஒத்தாசைக்கு பொண்ணு களைக் கூப்பிடுவேன்... தைக்கும்ங்க, ஊக்கு வைக்கும்ங்க அடுத்த வாரம் ஐம்பதாய் தந்திடறேன்."

இவள் துணியை வெட்டிப் போட்டால் மற்ற பெண்

சுறுசுறுப்பாய் முடிப்பார்கள். ஆனால், அவர்களையும் ஊக்கப்படுத்தித் தூண்டினால்தான் வேலை ஜரூராய் போகும். இல்லையெனில் இப்படி தேக்கம்தான்.

மனக்குதிரையை அடக்கி, வேலையில் விரட்டினாள்.

இரண்டு நாட்கள் வேலை மும்முரமாய் நடந்தது.

"இங்கேயே உக்காந்து கொக்கி வையுங்களேன். ஒருத்தருக்கு ஒருத்தர் பேசினபடி செய்தா அலுக்காம காரியமாகும்" –என்று, வந்து வேலை வாங்கிக்கொண்டு போகும் பெண்களை உடன் இருத்திக்கொண்டாள்.

ஆள் நடமாட்டம் இருக்க– மனம் அதிகமாய் நினைவு, கனவுகளை மேயப் போகவில்லை.

பங்களாவிலும் ஆட்கள் வரப்போக என்று கலகலப்பு. இவளிடம் வந்து விவரம் சொல்லிப் போனான் பாஸ்கரன்.

"மெஷினரி சீக்கிரம் வந்திடும். வேலைக்கு ஆட்கள் வேணுமே! பத்திரிகைகளிலே விளம்பரம் தந்திருந்தேன். 'இன்டர்வியூ' நடக்குது."

"சரி..."

"நீயும் வாயேன். பார்த்து உன் அபிப்ராயம் சொன்னா முடிவெடுக்க எனக்கு சவுகரியம்."

"இந்த வாரத்துக்குள்ளே நாப்பது ரவிக்கைகளைத் தைக்கலேன்னா என் நிலைமை சிரமம். மறு மாசம் உங்களுக்கு வாடகை வராது" கசப்பாய் சிரித்தாள்.

"இது உன் வீடு... சொன்னது மறந்தாச்சா?" அவன் பேச்சிலும் சற்று கசப்பேறியது.

"மறக்கலை."

"அந்தக் கடித விஷயமாய் பதில் ஏதும் நீ சொல்லலியே?"

அவன் குரல் ஏனிப்படி தடுமாறுகிறது?



"கேலி, கிண்டலுக்கெல்லாம் பதில் எதுக்கு?"

"கல்யாண விஷயத்திலா கேலி?"

'சரக்'கென நிமிர்ந்தான்.

"அந்தப் பேச்சே வேணாமே... பிடிக்கலை..."

விலகி நடந்த வேகத்தில் அவன் கோபம் புரிந்தது.

எதற்கிந்த ஆத்திரம்?

அர்ச்சனா போன்ற அழகிகள் விழுந்து மொய்க்க, தான் ஒதுங்குவதில் இவனுக்கு என்ன நஷ்டம்?

அந்தக் கடிதத்தை முழுக்கப் படித்திருந்தால் இத்தனை குழப்பம் இராது.

அர்ச்சனா தினமும் வருகிறாளோ?

இருக்கும். ராணி வந்தால் விவரம் தெரியும்.

ராணியின் அரவமே காணோம். அவள் மூலமாகத்தான் தனக்கு விவரங்கள் தெரிந்தது என்று ஓட்டை வாய்த்தனம் காட்டியது தப்பு. பாஸ்கரன், ராணியை எச்சரித்திருப்பான். திட்டியிருக்கக் கூடும்.

யார் வந்தால் என்ன, எது சொன்னாலும் என்ன– என்ற ரீதியில் இருந்தால்தான் வாழ்வில் நிம்மதி.

வேலையில் மூழ்கியது மனம்.

ஆனால், மூன்றாம் நாள் இரவு... அந்தப் . பயங்கரம் நேர்ந்தது! மறுநாள் காலை மொட்டை மரத்தைப் பார்த்து தன்னையே 'அசடு' என்று தேற்றிக்கொண்டது போல இம்முறை முடியவில்லை. மறுநாளும் கூட முந்தைய இரவு நேர்ந்ததை நினைக்க... வியர்த்தது.

இரவு அயர்ந்த தூக்கத்தில் இருந்தாள்.

யாரோ "ஸ்ஸ்" என்று உசுப்பி எழுப்புவதான பிரமை... சிரமத்துடன் கண் விழித்தாள் பரணி. 'காற்றாய்த்தான் இருக்கும்,

என்றபடி மறுபடி விழிகள் சொருகுவதற்குள் அந்தக் குரலின் கிசுகிசுப்பு–

"நச்சத்திரா... நச்சத்திரா..."

விலுக்கென விழிப்பு தட்டியது.

உடம்பு முழுக்க காதானது போல... கவனித்தாள்.

"போ... போ... போயிடு... ஓடிரு..."

மந்திரம் போல, எங்கோ ஆழத்திலிருந்து கிளம்பி அந்தக் குரல் கேட்டது... அது வெறும் ஒலிதானா?

வியர்க்க ஆரம்பித்தது. பல்லி போல படுக்கையோடு அழுந்தினாள்.

'நச்சத்திரா... விட்டிரு... ஓடு...ஓடு... நச்சத்திரா.'

அமானுஷ்யமான உச்சரிப்பில் இவள் மேனி சிலிர்த்தது.

நரம்புகளை இறுக்கிச் சுருண்டாள்.

இதயம் எகிறித் துடித்தது.

மூச்சு சீரில்லாமல் விக்கியது.

எத்தனை நேரம் அந்த அவஸ்தை என்பது தெரியவில்லை. அரைகுறையான உறக்கமும், விழிப்புமாய் உதறி உதறி கழித்த இரவு, அது.

குழந்தையும் பயந்திருப்பாளோ?

ஆனால், அனு முகத்தில் வழக்கமான மலர்ச்சி.

ஆக அவள் எதையும் கேட்கவில்லை.

அத்தனையும் தன் மனப் பிரமையோ?

இல்லை... இத்தனை நாட்கள் இல்லாது இப்போது ஏன்?

குரல் நிஜம்தான்!

சமையலை தொடங்க சமையலறை மேடைப் பக்கமாய் போனவளது புருவங்கள் முடிச்சேறின.



அந்தக் கருங்கல் மேடை முழுக்க சின்ன சின்ன காகிதத் துண்டங்கள்.

ஒவ்வொரு இரவும் சமையல் மேடையை துளி ஈரமோ, அழுக்கோ இல்லாதபடி துடைத்துவிடுவாள்.

பிறகெப்படி இவை வந்தன?

அவ்வறையின் சன்னல் சாத்தியபடிதான் இருந்தது. மேலே புகை போக இருந்த சிறு செவ்வகத் திறப்பு வழியே வந்திருக்கக் கூடுமோ?

காற்றில் சருகு, தூசி உள்ளே வரலாம்.

காகிதங்கள்... அதிலும் இத்தனைத் துண்டுகளா?

பலவற்றில் வண்ண எழுத்துகள்...

நடுங்கும் விரல்களால் ஒரு துண்டை எடுத்துப் பார்த்தாள்.

'போ' என்ற ஒரே எழுத்து.

மற்றவற்றையும் பார்க்க, அத்தனையிலும் அதே எழுத்து அல்லது சொல்.

இருபது, முப்பதாய் கிழிக்கப்பட்ட அத்தனைத் துண்டுகளிலும்! மறுபக்கத்தில் 'ஸ்கெட்ச் பேனா'வில் பரணியின் எழுத்து...!

என்னவா இருக்கும்?

பரபரப்பாய் காகத துண்டுகளை சேர்க்க முயற்சித்தாள்.

"சித்தி... பாலு வேணும்."

"இதோ தரேன் அனு."

அதன் பின் அன்றாட பிற வேலைகள் தொடர்ந்தன.

உப்புமா கிளறி– அனுவுக்கு மதிய உணவும் கட்டி அனுப்பி பிறகு மீண்டும் பதறும் மனம், விரல்களுடன் துண்டுகளை கோர்வைப்படுத்தினாள்.

இது... இது... அவள் பாஸ்கரனுக்கு... அனுவின் பிற





நாளுக்காய் தந்து அனுப்பிய அழைப்பிதழ்...

அப்படியென்றால் இதெல்லாம் அவன் வேலைதானா? மனம் 'ச்சீ' என்றது.

தனியாய் இருக்கும் ஒரு பெண்ணை மிரட்ட இத்தனை தரங்கெட்ட முறைகளா?

இவளைத் துரத்திவிட்டால் ஏகபோகமாய் இங்கு அரசாட்சி செய்யலாம் என்பது அவன் திட்டமா?

ஏனோ அழுகை முட்டியது.

இத்தனை தாழ்ந்தவனா பாஸ்கரன் என்ற ஏமாற்றத்தில், இனி தனக்கென்று ஆதரவு யாருமேயில்லை என்ற துக்கத் தவிப்பில்!

## 9

ராணியை இரவில் தனக்குத் துணையாய் இங்கு வந்து தங்கச் சொன்னால் என்ன?

பங்களாவின் பின்வாசல் வழியே சமையல் அறைக்குள் நுழைந்தாள் பரணி.

"ராணி..." குரல் தந்தாள்.

"ஆங்... வா... ஏதும் வேணுமா?"

ராணியின் முகம் இருகியிருந்தது– குரலும் சகஜமில்லை. தன்னைக் காட்டிக் கொடுத்துவிட்டாளே என்ற கோபமோ

"எம்மேல கோவமா ராணி?"

"உம்மேல எதுக்கு? மொத்தமா ஏதோ எரிச்சல்..."

அகண்ட பாத்திரத்தினுள் கெட்டித் தயிரை 'சொத்'தெ கொட்டி, தண்ணீர்விட்டுக் கடைய ஆரம்பித்தாள்.

வேலை அதிகம் போல... முகத்திலும் சகஜமில்லை. ஆக 'ஜகா' வாங்கிவிட வேண்டியதுதான் என்று நினைத்த நேரம் ராணி பேசலானாள்.

"மூணு நாளாய் நா இங்கு பாதி நேரந்தான் வேலைக்கு வர்றது. எந்தம்பிக்கு மேலுக்கு முடியல..."

"என்னாச்சு... ராணி?"

"காச்சலு. அனத்திட்டே கிடக்கான். டாக்டரு 'டைபாயிடு டெஸ்ட்' பாருங்கறாரு. மூத்தவனைக் கூட்டிட்டு போகச் சொல்லியிருக்கேன். அங்கதான் நிலமை சரியில்லைன்னா இங்கேயும் திருப்தியில்லை."

'சர்சர்'ரென மோர் நுரை தெறிக்க சிலும்பியது.

"ம்ம்... ஏன்?" தயக்கமாய் கேட்டாள்.

"வூட்டுல ஏறுறவங்க நல்ல மனசுக்காரங்களா இருக்கணும் பரணி. கண்ட கழுதைகளும் ஏறினா வூடு விளங்குமா? இந்த மாரிமுத்து வேல என்ன?"

கைகளின் வேலையோடு பேச்சின் மும்முரமும் கூடியது.

"யாரு? நம்ப வீட்டுக்கு வர்ற மாரிமுத்துவா?"

"அவனேதான்? அவன் வீடு மதுரப்பக்கம். அவங்க அதான் தாரிணியோட 'பாக்டரி'க்கு போவான். போற வழியில நமக்கு உதவி செய்ய ஐயா ஏற்பாடு செய்தாரு. நல்ல ஏற்பாடுதான். ஆனா, பய சரியில்லாதவன்..."

"எலும்புந் தோலுமா இருப்பான். அவன் அதிர்ந்து பேசிக்கூடக் கேட்டதில்லியே?"

"குடிகாரன். குடிக்கப் பணம் வேணுங்கறதுல மத்த எல்லா வேண்டாத பழக்கமும் சேரும்ல...?"

இப்படித் தூண்டித் துருவுவது பரணியின் சுபாவமில்லை. ஆனால், எதுவுமே தெரியாமல் இருப்பது நல்லதல்ல என்று தோன்றிய பிறகு இது பாவமாய்படவில்லை.



"மூணு நாள் முன்னே சமையல முடிச்சுட்டு ஹாலைப் பெருக்கலாம்னு போனா... இந்தப் பய அங்கே நிக்கறான்! அவனுக்கு வீட்டுப் படியேற வேண்டிய அவசியமென்ன? ஒண்டியா 'திருதிரு'ன்னு நிக்கறான்- விரட்டியடிச்சேன். நேத்து இங்க எங்கிட்ட வந்து பேச்சு வளக்கான்... வூட்டுக்குள்ள என்ன வேலை? எதுவோ சரியில்லை. முதல்ல அந்த அர்ச்சனா பொண்ணு... இப்ப இந்தக்குடிகாரப் பய..."

அரிந்து வைத்திருந்த பச்சை மிளகாய், இஞ்சி துண்டுகளை மோரில் இட்டாள். அளவாய் உப்பிட்டு, தம்ளர்களில் ஊற்றினாள்.

அர்ச்சனாவைப் பற்றி எப்படிக் கேட்க?

"நிறைய ஆளுங்க வரப்போகன்னு இருக்காங்க..."

"ம்ம்...உனக்கு வேலைதான்."

"ஆங்... என்ன விசயமா வந்தே? இத எடுத்துட்டுப் போகணும்."

"சும்மாமதான். உந்தம்பிக்கு சீக்கிரஞ் சரியாயிடும். வரட்டா..."

ராணிக்கு இருக்கும் பிரச்சினைகள் போதாதென அவளை இங்குமா இழுக்க? என் வீட்டில் பேயிருக்குது- நீயும் வந்து அச்சத்தை அனுபவி என்பதா?

ஆனால், இரவை நினைத்தால் வயிறு சுருண்டது.

அன்று மதியம் அவளுக்கு நட்சத்திரம்மாவின் கடிதம் கிடைத்தது. அதை நெஞ்சோடு அணைத்துக்கொண்டதே பெரும் ஆறுதல். பிரித்து 'மளமள'வென்று வாசித்தவள், மீண்டும் மீண்டுமாய் கடிதத்தில் விழியோட்டினாள்.

விஷயம் பெரிதாய் எதுவுமில்லை. சவுகரியமான பயணம் பமீலாக்காவின் வீடு, பேரன்- பேத்தியின் பேச்சு, விளையாட்டுகள் அங்குள்ள ஆலயம், மக்களின் மொழி சரிவர புரியாத பிரச்சினை

சிதோஷ்ணம் என்று பொதுவான பல செய்திகள்தான்.

இவளையும், அனுவையும் பற்றின அன்பான விசாரிப்பு.

'பாஸ்கரன் அங்கு வந்திருப்பானே? அவன் அங்கிருப்பது உங்களுக்கு நல்ல துணை' என்பதாய் ஒரு வரி- இப்படி சாதாரண கடிதம். ஆனால், அது அவளது மனபாரத்தைத் துடைத்தே போட்டது.

பாஸ்கரனது வரவு நல்லது அல்ல- பாதகம் என்பதைத் தவிர மற்றதெல்லாம் சரி!

இருட்ட இருட்ட மனதில் பயத்தின் மருட்டல் கூடியது.

ஆனால், அன்றிரவு பயந்தாற் போல ஏதுமில்லை!

அன்று பங்களா வளாகம் முழுக்க விளக்குகள் எரிந்ததும் ஒரு காரணமாய் இருக்கலாம்.

அனுவை ரிக்ஷாவிற்கு அழைத்துச் செல்லும்போது, அவன் வேலையில் மும்முரமாய் நின்றான். தூங்காதவை போல சிவந்த கண்கள்.

"எதுக்கு அங்கிள் இத்தனி லைட்?"

"ஷெட் கட்டறோமில்லையா, அனு? பகலில் மட்டும் வேலை நடந்தாப் போதாது. ராவும், பகலுமாய் வேலை நடந்தாத்தான் இயந்திரங்கள் வந்து இறங்க முடியும். அதுக்குத்தான் விளக்கு..."

"நல்லாக்கு..."

பங்களாவின் மறுபுறம் செங்கல் சுவர்கள் மளமளவென உயர்ந்தன. தூண்களும், அதன்மேல் 'ஆஸ்பெஸ்டாஸ்' கூரையும் அலட்டலே இல்லாமல் தோன்றின.

இத்தனை அரவம் இருப்பது பரணிக்கு நல்லதாயிற்று.

நாட்கள் தையல் இயந்திரத்தோடு கழிந்துகொண்டிருந்தன. அனுவிற்கு தேர்வு நேரம் என்பதைச் சாக்குவைத்து, பெரும்பாலும் வீட்டினுள்ளேயே கிடந்தாள்.



அன்று மாலை வெண்பொங்கலுக்குச் சேர்க்க அவள் நெய்யில் மிளகு, சீரகம், கருவேப்பிலை தாளித்த நேரம்... பாஸ்கரனது குரல் கேட்டது.

"பரணி" -மிக சன்னமான அழைப்பு.

"இதோ வரேன்."

இவனைப் பார்த்த ஒருகணம் அயர்ந்து போனாள்.

இவன் வந்து ஒரு மாதம்கூட இல்லை. அதற்குள் எத்தனை மாற்றம்! மெலிந்திருந்தான்.

மழிக்காத முகம்- கண்கள் இருண்டு, சற்றே குழிக்குள் இறங்கியிருந்தன. உதடுகள் வறண்டு... புன்னகை மறந்து...

"ஒரு நிமிஷம் உக்காருங்க. பொங்கலை கிளறிட்டு வந்துடறேன்."

"ஹை... பொங்கலா?" என்று தட்டுடன் அவள் பின்னே வரவில்லை அவன். வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

மவுனமாய், அந்நியனாய் அவன் ஹாலில் நின்றது உறுத்தியது. இனி உறவு, உரிமையாய் ஒட்டித் தொந்தரவு செய்யமாட்டேன் என்பது போல இருந்தது.

அவசரமாய் கேசத்தை, சேலையைத் தடவி சீராக்கிக்கொண்ட பிறகே பொங்கலைக் கிளறினாள்.

வாழை இலை வடிவில் இருந்த தட்டில் இரண்டு கரண்டி பொங்கலும், சிறிது மல்லிச் சட்னியும் வைத்து நீட்டினாள்.

"இல்லை பரணி...வேண்டாம்- சாப்பிட நேரமில்லை. நாளை 'மெஷின்'கள் வந்து இறங்குது. கூடவே, அதை இயக்கும் சிலரும் வருவாங்க. அவங்க நம்ப ஆட்களுக்கு விபரம் சொல்லி தரணும். 'என்ஜினியரிங்' முடிச்ச ரெண்டு பையன்களையும் வேலையில் சேர்த்திருக்கேன். ஓரளவு அவங்களுக்கும் 'மெஷின்' பற்றி பத புரிஞ்சாச்சுன்னா, சின்ன வேலைக்கெல்லாம் வேணாம். எனக்கும் ஓரளவு விபரம் புரிஞ்சால் நல்லது, அ

அவசியமும் கூட...”

“ரொம்ப சீக்கிரம் ‘ஷெட்’ போட்டுட்டீங்க...”

“இன்னைக்கு ஓலைங்க வந்து இறங்கியாச்சு. தொழிலாளிங்க ஓய்வு எடுக்க, மதியம் சாப்பிட ரெண்டு கீத்துக் கொட்டகையும் போடணும்.”

“முதல்ல ஒண்ணு போதாது...?

“ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியா போட்டுட்டா பிரச்சினை இல்லை...”

“ம்ம்... பின்னாடியும் ஏதோ வேலை நடக்குதே?”

“அதெல்லாம் கழிவறைகள். இத்தனை பேரை வேலைக்கு அமர்த்தும்போது அவர்களுடைய அடிப்படைத் தேவைகள் எல்லாம் சரியாய் இருந்தா நல்லது.”

“உண்மைதான். ஒரு மாசத்துக்குள்ளே இந்த இடமே மாறிடுச்சு...”

“வருத்தமா இருக்கா?”

“இல்ல. இடம் பொலிவா இருக்கு. சுறுசுறுப்பான வேலை.”

“தாங்க்ஸ்” –புன்னகைத்தான். “தேவை இருக்குது. சீக்கிரம் ஐஸ்கிரீமைக் கண்ணிலே காட்டுங்க. நல்லாயிருந்தா விற்பனை பிய்க்குன்றாங்க. இப்படி வாங்கறவங்க ஆர்வமாய் இருக்கிற போதுதானே நாமும் விக்கணும்? அதான் கஷ்டம்பாராம செய்திட்டேன்.”

“நல்லது.”

“ஆஹ்... ஒரு வாரத்துக்குள்ளே வேலை ஆரம்பிச்சாகணும். முதல் நாள் ‘கோன்’ தயாரிப்பு மட்டுந்தான். தொடர்ந்து ஐஸ்கிரீம். அதன் விற்பனை ஏற்பாடுகளையும் பக்காவாய் செய்யணும்”

“ஆமா! அது முக்கியம். எடுத்த எடுப்பில் ஆயிரம் லிட்டர் பாலோட மற்றதையும் கொட்டி செய்தால்... அத்தனையும்



விற்கணுமே...”

“ஆரம்பத்தில் நூறு லிட்டர் ஊற்றி ஒரு ‘ஷிப்ட்’ வேலை நடக்கும். அதை வாங்க ஆட்களை தயார் பண்ணிட்டேன். அவர்கள் தேவை கூடி, நமக்கும் பேர் கூடக்கூட உற்பத்தியைப் பெருக்கலாம்.

“புரியுது. வாழ்த்துகள்.”

“வர்ற வியாழக்கிழமை மாலை ஆறு மணிக்கு பங்களாவுக்கு வந்திடு பரணி. இன்னும் வேண்டிய சிலரைக் கூப்பிட்டிருக்கேன். சின்ன விருந்து போல... அதலே நீயும், அனுவும் கலந்துக்கணுங்கறது என் ஆசை.”

குரலில் வழக்கமான அவனது உல்லாசத் துள்ளல் இல்லை.

வறண்ட அக்குரலைக் கேட்க விசனமாய் இருந்தது.

நம்ப முடியவில்லை.

இவனா தன்னைப் பயமுறுத்தி இந்த வீட்டைவிட்டுக் கிளப்ப முயற்சித்தது?

ஆனால் திடுதிப்பென்று–

‘பங்களாவினுள் குடியேறு. புருஷன்– பெண்சாதியாய் வாழலாம்’ என்றானே...!

அதையும்தான் நம்ப முடியவில்லை.

அது மாதிரியான பேச்செடுக்காதே என்றது தவறா என்ன? எந்தப் பெண்ணும் இதையேதான் சொல்லியிருப்பாள். அதாவது நியாய உணர்வுள்ள எந்தப் பெண்ணும்!

“வரேன்”– நடந்துபோனவனை வெறித்து நின்றாள்.

ஆளின்றி வனாந்தரமாய் கிடந்த பங்களாவின் இரண்டு ஏக்கர் சுற்றுப்புறம் இப்போது பஸ் நிலையம் போலிருந்தது.

‘பாத்து ஏத்துப்பா...’

‘ஏ பெண்ணு, பராக்கு பாக்காத! செங்கலப் போடு.’

'செக்யூரிட்டிக்கு சொல்லி இருந்திங்களாமே? ரெண்டு பேரை அனுப்பியிருக்காங்க ஸார்.'

'ஏய்... ஜீப்பு எங்கே போவுது! மதுரைக்கா? நானும் வரேம்பா...' என்று கலவையான கூச்சல்கள், பேச்சுகள்.

கணக்கு வழக்கின்றி ஆட்கள் வந்து போனதில், வேலை ராணியின் மென்னியைப் பிடித்தது.

குவியும் பாத்திரங்களைக் கழுவ ஒரு பையனை நியமித்திருந்தான் பாஸ்கர். பயல் அப்பப்போது தலைமறைவாகி பீடி நாற்றத்துடன் மீண்டான்.

ஆனால், இன்னும் இரண்டு பேருக்கான வேலை இருந்தது அங்கே!

இவள் ராணிக்குக் கைகொடுத்தாள்.

பக்கத்தில் உணவகம் ஏதும் இல்லாததால், ஐம்பது- அறுபது பேருக்கேனும் தினம் சமையல் ஆகவேண்டியிருந்தது.

'எல்லாருக்கும் செய்ற தயிர் சாதமோ, எலுமிச்சைச் சாதமோ எனக்கும் போதும் ராணி' என்றிருந்தான் பாஸ்கர்.

ஆனாலும், ஏழெட்டுப்படி சாதம் வடித்துக் கலப்பதும் லேசில்லையே! பெரியம்மா நிறைத்து வைத்திருந்த ஊறுகாய் ஜாடிகள் அத்தனையும் காலி. அவ்வப்போது மாங்காய் அரிந்து தாளித்தார்கள்.

அன்று சாம்பாருக்கான கத்தரிக்காய்களை இவள் அரிந்து உதவிக்கொண்டிருந்த வேளையில்– சமையலறைக்குள் பாஸ்கர் வந்தான். இவள் அருகே அடுத்ததாய் அரியவேண்டிய பத்து பெரிய மாங்காய்கள்.

சொல்ல வந்ததை முழுதும் மறந்தாற்போல நின்றவன், வெகு அரிதான காட்சியினை மனதில் பதித்து வைப்பது போல அவளையே உற்றுப் பார்த்தான்.

விழிகளை வெகு சிரமப்பட்டு மீட்டு, வெளியேறினான்.



வீட்டில் தங்களுக்காக சமைத்திருந்த கீரையோடு, வடகம் வறுத்து அவனுக்காய் ராணியிடம் தந்துவிட்டாள்.

கூடவே பன்னீர் மணத்த இனிப்புத் தயிர்.

"நல்லது பரணி– ஐயா மெலிஞ்சு தெரியறாரு இல்ல? நானும் அவருக்குன்னு ஏதாச்சம் ஸ்பெசலாகச் செய்யணும்னு நினைக்கறதுதான். ஆனா, வேலை ஜாஸ்தியாப் போச்சு... நீ இருக்கதால பிழைச்சேன் போ..."

ராணி நன்றி பாராட்டினாள்.

"பெரியம்மா இருந்திருந்தா இப்படி ஏதும் செஞ்சிருக்க மாட்டாங்களா? அந்தக் கடமைக்கு என்னாலானதைச் செஞ்சேன்."

'ஆஹா... அது மட்டும்தானா காரணம்?' –நக்கலாய் நகைத்தது பரணியின் புத்தி.

## 10

அன்று தொடக்க விழா நாள்.

இரவு விருந்திற்கான பொறுப்பை சமையல் புள்ளியிடம் ஒப்படைத்திருந்தான் பாஸ்கர்.

சமையல் பொறுப்பு விலகிய உற்சாகத்தில் ராணியும், பரணியும் வீட்டை அலங்கரிப்பதில் மும்முரமாக இருந்தனர்.

மேசை, நாற்காலிகளை சற்று ஓரமாய் நகர்த்தி, வேறு முறையில் அமைக்க ஹால் மேலும் விஸ்தாரமாய் தெரிந்தது.

கழுவித் துடைத்த சிவப்புத் தரை, மருதாணியிட்ட பெண்ணின் பாதம் போல மயக்கியது.

அனுவின் பிறந்த நாள் அன்று பாஸ்கர் தொங்கவிட்ட அதே அலங்காரங்களைச் சுவரில் அங்கும் இங்குமாய் தொங்க

விட்டான். கண்ணாடி குவளைகளில் வாசனை ரோஜா கொத்துகள்.

வாசலில் ரங்கோலி.

"ஹா! ஆண் எத்தனை சாமர்த்தியமாய் வியர்வை சிந்தி மெனக்கெட்டாலும் இந்த நளினம் வராது. 'ஸ்டார் ஓட்டல்' அசத்துதே நம்ம வீடு...!" பாராட்டிய பாஸ்கர் மூச்சை இழுத்துவிட்டான்.

"நம்ம தோட்டத்தில் இத்தனை ரோஜாக்கள் பூத்திருந்தனவா என்ன?"

"மதுரையில் சொல்லி வச்சு வாங்கினேன்!"

"ஆங்... நான் சாப்பாடு ஏற்பாடு செய்தாப் போல, இத்தனை டஜன் ரோஜான்னா அவங்க கொண்டுவந்து தந்திருவாங்க. அப்படித்தானே?

"ஆங்...யாருங் கொண்டு தரல. பரணிப் பொண்ணுதான் சைக்கிள்ல போய் கொண்டாந்தது. வர்ற வழியில நாலு தடவ நிறுத்தி ஐஸ் தண்ணி தெளிச்சு, ஈரத்துணி போர்த்தி குழந்த மாதிரி அலுங்காத எடுத்தாந்தது..."

பலூனை ஊதியபடி சென்னாள் ராணி.

"ஷ்... பலூனை மட்டும் ஊது... போதும் ராணி" தாழ்ந்த குரலில் கண்டித்தாள்.

"எதுக்கு இந்த அலைச்சல். கார் இருந்ததே?..."

"எல்லாருக்கும் வேற வேலையும் இருந்துச்சே... இது என்னால முடிஞ்ச ஒரு சின்ன பரிசு...அதான்..."

"பலூன் எல்லாம்கூட நீதான் வாங்கினியா?"

"ம்... ஆளுக்கு நாலாய் ஊதத் தந்தேன்– எல்லாம் ரெடி."

"தா... தாங்க்ஸ் பரணி. எல்லாம் அற்புதமா இருக்குது."

அவன் பேச்சில் மெய்யான நன்றி இருந்தாலும், பழைய



துள்ளல் தொனி இல்லாதது நன்றாகவே இல்லை.

புள்ளிகளற்ற சிவிங்கியை, வரிகளை உருவியப் புலியை பார்ப்பது போலிருக்க– வருந்தினாள்.

அவனுக்கு அதிக வேலை. அதோடு, தொடரும் புது வியாபாரம் நல்லபடி போக வேண்டுமென்கிற பதற்றமாக இருக்கும்.

"எல்லாம் நல்லபடி நடக்கும். நீங்க அரை மணி நேரமாவது படுத்து எழுந்திருங்க..." பரிவாய் சொன்னாள்.

"சரி... உங்கதை என்ன? வீடு மட்டும் அசத்தினாப் போதுமா?"

"இதோ.... கிளம்பிட்டேன்"

வீட்டுக்கு போய்விட்டு– மாலையில் விழா ஆரம்பிக்க பத்து நிமிடம் முன்பு பங்களாப் படி ஏறினவளின் அலங்காரம் எளிமையாய் தோன்றினாலும் கண்ணை நிறைத்தது.

கரும் சிவப்பு ஜார்ஜெட் சேலை.

அந்த பிளெயின் சேலைக்கு அழகே அந்த ரவிக்கையால்தான். கருப்புப் பட்டில் சிவப்பு. தங்கமணிகள் பதித்து மின்னியது. ஊடாய் கண்ணாடி வட்டங்களின் கண் சிமிட்டல். தளரப் பின்னிய ஜடையில் ஒற்றை சிவப்பு ரோஜா, காதில் பெரிய வளையங்கள்.

அந்த ரவிக்கை நாள்கணக்காய் அர்ச்சனாவிற்காகத் தைத்தது. மிக அழகாய் வந்திருந்தது. ஆனாலும், அர்ச்சனாவிற்கு திருப்தி இல்லை.

'கழுத்து ரொம்ப மேலேறி இருக்கே பரணி. எனக்கு எப்பவும் 'லோ கட்'தான் பிடிக்கும். இறக்கிடு"

'அப்ப வேற தையி!'

'அப்ப... இது வீணாயிடுமே மேடம்'

மணிக்கணக்கில் சில நாட்களாய் மெனக்கெட்டிருந்தாள்.

விரல் நுனிகள் சிவந்து தோல் உரிந்திருந்தன.

ஒவ்வொரு மணியும், முத்துமாய் ஊசியில் கோர்த்து– வி
சோர தைத்த ரவிக்கையின் பிசிறில்லாத வேலைப்பாடு.

"பச்...எனக்கு வேணாம். என் உடம்புக்கு கழுத்து இறக்க
இருந்தாத்தான் எடுப்பு. இது ஏதோ போன நூற்றாண்டு மகா
மாதிரியில்ல இருக்குது...!

'நிறைய வேலை...'

'அதுக்கான கூலி தந்திடறேன். ரவிக்கையை நீயே வச்சுக்
அல்லது வித்திடு'– அலட்சியமாய் பதில் வந்தது.

அந்த ரவிக்கையை தனக்கென்று வைத்துக் கொண்ட
பரணி. ஆனால் சும்மாயில்லை. தானே வேறொரு கருந்
பட்டுத்துணி வாங்கி, அதேபோல விரல் ஒடிய– நகங்கள் சி
வேலைப்பாடு செய்தும் தந்தாயிற்று. பைசா கூலி வாங்
கொள்ளவில்லை.

சிறு அசைவிலும் அந்த ரவிக்கை மின்னலாய் பளபளத்
அனு பட்டுப் பாவாடையில் பட்டாம்பூச்சியாய் திரிந்
சிறு வெள்ளித்தட்டில் கல்கண்டுடன் அனுவை வாசலில் நிறு
வைத்தாள். அதுவும் மகாகர்வமாய் நின்றது!

வருபவர்களை 'வாங்க' என்று இனிப்பு நீட்டி அது வரவே
பாங்கு கொள்ளை அழகு.

அத்தனையையும் ரசித்த பாஸ்கரனது விழிகள் அவ்வப்போ
இவளை நன்றியுடன் தொட்டன.

அர்ச்சனாவும் வந்துவிட்டாள்.

தன் தந்தையுடன் தோரணையாய் வந்திறங்கியவ
பாஸ்கருடன் இழையலானாள். தான் வெகு கவர்ச்சியாய் உடுத்
வந்திருந்தும்கூட அவன் பார்வை அடிக்கடி பரணியைத் தே
தொட்டு மீண்டதை எரிச்சலோடு கவனித்தாள்.

"ஏதும் உதவி வேணுமானா சொல்லுங்க பாசு"



"சொல்லாமலேயே அத்தனையையும் பரணி இழுத்துப்
பாட்டு செய்துட்டா" என்றவன், தோள் குலுக்கினான்.

அழைத்திருந்த அனைவரும் வந்திருந்ததில் அவன் உற்சாகம்
ண்டிருந்தது. இளம் சாம்பல் நிற கோட், கருநீல பேண்டில்
ஏதோ விளம்பர நாயகன் போலத் தோன்றினான். கருநீலச்
ட்டையின் மேல் இரு பொத்தான் வரை இறுக்கி, டையும்
டிச்சிட்டிருந்தால் தோற்றத்திற்கு ஒரு இறுக்கம் வந்துவிடும்.
த்தனை இயல்பான கவர்ச்சி வாய்க்காது.

அவனை ரசித்ததோடு அவன் விழிகள் தன் மீது பதிந்த
பாதெல்லாம் பரணி பூரித்தாள்.

அவனுக்குத் தன்னாலான உதவியைச் செய்ய முடிந்த
ற்சாகத்துடன் மேலும் சுற்றிச் சுழன்றாள். அந்த சந்தோஷச்
மலில் முகத்தில் தனி சோபை ஏறியிருந்தது. பரபரப்பில்
வளது கன்னங்கள் தக்காளியாய் கனிந்திருந்தன.

"பாட்டுகளை ஜெராக்ஸ் செய்து வச்சிருந்தேனே, பரணி?"
தடினாள்.

"இதோ தரேன்" உள்ளே ஓடினாள்.

"விருந்துக்குப் பிறகு பரிமாற வேண்டிய ஐஸ்கிரீம்?"

"வந்தவுடனேயே பிரிட்ஜிலே வச்சுட்டேன்."

"பாட்டில் ஓப்பனர் எங்கே?"

"அங்கதானே வச்சிருந்தேன்."

அவனும், பரணியுமாய் இணைந்து சுழல, அர்ச்சனாவின்
ண்கள் எதையும் கவனிக்க தவறவில்லை.

பார்வையில் பச்சை அடித்தது– பொறாமையின் பச்சைத்
தணல்!

தன்னை 'மேடம்' என்றழைத்து கைநீட்டி கூலி வாங்கி
பிழைப்பவள் இன்று இவ்விழாவின் நாயகியாய் சுற்றி
வருவதென்ன? நேசமுள்ள புருஷன்– பொண்டாட்டி போல

இருவர் பார்வைகளும் இணைந்து இழைவதென்ன?

பரணிக்கு மாளிகைக்கு ஏற்ற அழகும்கூட... அவள் செய்
எந்த வேலையும் நேர்த்திதான். பாஸ்கர் சதா அவளைத்தா
எதிர்பார்க்கிறான்.

அர்ச்சனாவிற்கு பிரியாணி சுவைக்கவே இல்லை.

அங்கு வந்திருந்த பெரிய மனிதர்கள் அவளுக்கு தோதா
வயதில் இல்லை. பார்த்து பார்த்து பண்ணின தன் அலங்கா
வீண் சலிப்பு, அவளுக்கு. இடுப்பில் வெகு இறக்கமாய் கட்
சேலையும், கையில்லாத சின்னஞ்சிறு சோளியும் அச்
ஊருக்கும், எளிய விழாவிற்கும் பொருந்தவில்லை.

தான் சோடியம் விளக்காய் கண்ணைக் கூசினாலும், பர
பாவைவிளக்கின் அம்சத்தோடு இருப்பதை உணர்ந்த எரிச்ச

தனக்கும் அழைப்பு கிடைத்ததில் உற்சாகமாய் சுற்றிவ
மாரிமுத்துவை அழைத்து சற்று நேரம் பேசினாள்.

விருந்தும், வாழ்த்துகளும் முடிந்து அனைவரும் விடைபெ
வாசல்புறம் குழுமி இருந்தனர்.

இரவு காற்று ஜிலஜிலுத்தது.

பீடா தட்டை எடுத்து வந்து அனைவருக்கும் நீட்டிய பரவ
அகஸ்மாத்தாய் பாஸ்கர் பக்கம் நின்றாள்.

வெகு பொருத்தமான ஜோடி... இவனுக்கென்று படைக்க
பட்ட மறுபாதி என்னும் படி...

அர்ச்சனாவிற்கு நெஞ்சு எரிந்தது.

காற்றில் சேலையும், நெற்றி கேசமும் அசைந்து புர
மிருதுவான புன்னகையுடன் நின்ற பரணி அழகிய தேவ
போலிருந்தாள்.

"குளிரலையா பரணி?" பாஸ்கர் பரிவாய் குனிந்து கேட்
அர்ச்சனாவிற்கு தாளவே முடியவில்லை.

"அது நல்ல கெட்டிப்பட்டு. முத்தும், மணியுமாய் வச்சு தச்



# தீபக் கோலம்



(21 புள்ளி 11 வரை ஊடு புள்ளி).

- ஆர்.ராம்.அலமேலு, திருச்சி.

# இதயம் பேசுகிறது

## விறுவிறு 'எக்ஸ்பிரஸ்'

ராஜேஷ்குமாரின் 'எதிரில் ஒரு எதிரி' நாவல் பரபரப்புடன் நல்ல விறுவிறுப்பும் சேர்ந்த 'எக்ஸ்பிரஸ்!'

*சுந்தரி முருகன், சாத்தான்குளம்.*




கதை சம்பவங்களும், சஸ்பென்ஸும் ஜல்லிக்கட்டை விட வேகமாக இருந்தன.

*ஆர். ராஜசேகரன், கொம்படிக்கோட்டை.*

நாவல் படித்த இரண்டு மணி நேரமும் ராணுவத்தில் இருந்த ஒரு உணர்வு.

*எஸ். மாரிமுத்து, அரியலூர்.*

ஒவ்வொருவருக்கும் தேசபற்றை அதிகரிக்கச் செய்யும் படைப்பு.

*துரை கார்த்திகா, இந்திராநகர்.*

திகில் ஊட்டியது மட்டுமல்ல; மயிர்க்கூச்செரியவும் வைத்தது.

*பிச்சைமுத்து, சிங்கப்பெருமாள்கோவில்.*

ராணுவ மிரட்டலுடன் இருந்தாலும், போர்க்களத்து பூவாக ஒரு மென்மையான காதலை இழையோட விட்டிருந்தார் ராஜேஷ்குமார்.

*ஆர்.பி. ஜெயச்சந்திரன், பூனாம்பாளையம்.*

போர்க்களத்தில் விமான தாக்குதல்களை நேரில் காண்பது போல், தத்ரூபமாக இருந்தது நாவல்.

*ம. வசந்தா, கச்சிராயபாளையம்.*

நாவல் விவேகத்துடனும், வேகத்துடனும் சென்றது அருமை.

*எஸ்.ஜே. ஜோதி, திருவானைக்காவல்.*

பிரார்த்தனாவின் தைரியம் பாராட்டக்கூடியதாக இருந்தது.

*டி. நஸ்ரின் பாஷா, மங்களூர்.*

**அட்டையில்:**

நடிகை **சிநேகா**

நாவலைப் படித்துவிட்டு, உங்கள் கருத்துகளை எழுதி அனுப்புங்கள்.
முகவரி: **இதயம் பேசுகிறது, "ராணி முத்து", சென்னை-600 007.**



அந்தப் பட்டு ரவிக்கை உறுத்துமே தவிரக் குளிராது. அது நான் வேணாம்னு கழிச்சுக்கட்டின சோளி. எனக்கு தெரியாதா என்ன- சரிதானா பரணி?"

'கணீர்' என்று அர்ச்சனாவின் குரல் அத்தனை பேருக்கும் கேட்டது. பரணி குறுகினாள்.

அத்தனை பேருக்கும் நடுவே சேலை நழுவினது போன்ற அவமானம்.

"நல்லவேளை! இந்த ரவிக்கை பரணிக்குப் போச்சு அர்ச்சனா. ஏன்னா, வேற யாருக்கும் இது இத்தனை அழகாய் இருந்திருக்காது. மனுஷங்களுக்குப் பொருந்தாது... தேவதைகளுக்கு மட்டுமே பொருந்தும்... ம்ம்?"

பாஸ்கர் வெகு நிதானமாய்- குரல் தாழ்த்தாமல் பதிலடித்தான்.

அர்ச்சனாவின் அப்பா, நிலைமை புரிந்து கிளம்பினார்.

"வரோம் பாஸ்கர்"

"என் அழைப்பை மதிச்சு வந்ததுக்கு ரொம்ப நன்றி ஸார்" பணிவாகக் கை குவித்தான்.

ஆனால், அவரின் அருகில் இருந்த அர்ச்சனாவை லட்சியமே பண்ணவில்லை. "என்ன பாசு, கண்டுக்காம நகருறீங்க? எங்கிட்டேயும் ரெண்டு நிமிஷம் பேசலாம்- அதுக்குள்ள பரணி புகையா மறைஞ்சிடமாட்டா?" உதடு சுழித்தாள்.

அவனும் கடித்த பல்லூடே சீறினான்.

"தெரியும்."

"இன்ன இன்ன வேலை நடக்கணும்னு சொன்னா நானும் வந்து ஒத்தாசை செய்திருப்பேன்ல...?

"நாந்தான் சொன்னேனே அர்ச்சனா- அத்தனையும் பரணியே இழுத்துப் போட்டுச் செய்தாள்னு..."

"எனக்கிந்த வேலைக்காரி 'டைப்' வேலையெல்லாம்

அவ்வளவாய் ஓடாது. ஆனா, தொழில்ல புலி."

"கொஞ்சம் நொண்டிப்புலி! நாம் சந்திச்ச மறுநாளே தொழில் பற்றி விசாரிச்சிங்க. ஆனா, நீங்க கேட்ட கேள்விகள்லயே தொழில்ல உங்களுக்கு அனுபவம் இல்லைங்கறதைப் புரிஞ்சுகிட்டேன்!"

சிரிப்பு மாறாமல் காலை வாரினான்!

"ஷ்... அனு, ஓரமாய் நில்லு. இத்தனை கார்களின் நடுவே குட்டியாய் நீ ஓடலாமா? -மெல்லிய அதட்டலுடன் அனுவின் பின்னால் வந்த பரணிக்கு அவன் பதில் கேட்டது.

ஆக, அவன் அவளோடு சரசமாடவில்லை. பொதுவான பேச்சுத்தான், அதுவும் அர்ச்சனா வலிய வந்து வளர்த்ததால்... ஏன் இந்த உண்மை நெஞ்சில் பாலை வார்த்தாற்போல் அத்தனை இதம் தருகிறது?

அவள் அருகிருப்பது தெரியாமலோ அல்லது பொருட்படுத்தாமலோ பேச்சு தொடர்ந்தது.

"தவிர, பரணி பழகவேண்டிய வேலைதானே அத்தனையும்..."

"அதற்கென்ன அர்த்தம்?

"இத்தனை நாள் பங்களா விசேஷங்களில் உதவிப் பழகினவள். நாளைக்கு இத்தனைக்கும் முதலாளியம்மாவாகப் போகிறவ- அந்த அர்த்தம்தான்!"

அர்ச்சனாவிற்கு எப்படியோ... இதைக் கேட்ட பரணிக்கு விக்கியது!

எத்தனை சாதாரணமாய் சொல்கிறான்? சம்பந்தப்பட்ட தன்னிடம் சொல்லாததை- தன் சம்மதம் இல்லாததை, மூன்றாம் நபரிடம் உண்மைபோல புளுகும் துணிச்சல்!

அந்த மாலை நேரம்- சந்தரனைக் கண்ட அல்லி போல வெகு இயல்பாய் மலர்ந்து மணத்துக் கொண்டிருந்த நெஞ்சு 'சுளீர்' என்று உச்சி சூரியன் சுட்டது போல சாம்பியது.



# 11

"மன்னிச்சிரு பரணி. அத்தனை பேர் நடுவே அர்ச்சனா அப்படி கூசாமல் பேசினது தப்புதான்"

"நீங்க பேசினதுதான் தப்புன்னு நினைச்சேன்"

"தேவதைகளுக்குத்தான் இந்தச் சோளி பொருத்தம்னு சொன்னேனே அதுவா?" குனிந்து பாவமாய் கேட்டான்.

பழைய குறும்பு... ஆனாலும் அவள் சிரிக்கவில்லை.

"இல்லை! இனி பரணிதான் இந்த பங்களாவின் முதலாளி அம்மான்னு நீங்க உளறினது"

"இன்னிக்கு நீ நடந்துகிட்ட முறை எனக்குச் சம்மதம் சொல்லுச்சுன்னு நினைச்சேன்..."

"கொஞ்சம் யோசிங்க..."

"யோசிச்சுத்தான் முடிவு கட்டினேன். வெட்கத்தால மறைமுகமாய் சம்மதம் சொல்றேன்னு..."

இதழ்கள் நகைத்தாலும் அவன் விழிகள் அவளை ஊடுருவித்தைத்தன. ஓடிவிட வேண்டும் போலிருந்தது. அந்தப் பார்வை தன் மனதைப் படித்துவிடக்கூடுமே!

ஆனால், இது தான் பேசித் தெளிய வேண்டிய விஷயம்.

"பெரியம்மா சார்பிலே இது நான் செய்த உதவி... கடமைன்னு வைங்க. அனு பிறந்த நாளின்போது நீங்க எங்களுக்கு ஒத்தாசை செய்யலை?"

"அது நாளை நான் அவ சித்தப்பா ஆகப்போறேன்ற உரிமையில்!"

"பிளீஸ்... விளையாட்டு விஷயமில்லை இது."

"கல்யாண விஷயம்- சரி, இப்போ அர்ச்சனாவுக்கு வருவோம். விஷம் தடவின நாக்கு அந்தப் பொண்ணுக்கு..."

"அர்ச்சனா பேச்சிலிருந்து என்னைக் காப்பாத்த அப்படி பேசினீங்க. நோக்கம் நல்லதுன்னாலும் எப்படியும் பேசலாம்னு அர்த்தமில்லை."

"சொல்ல வேண்டியதைச் சொல்லத் துணியாமத்தான் இப்படி சுத்தி வளைக்கிறேன்..."

இவனுக்கா துணிவில்லை?

குழப்பமாய் ஏறிட்டாள்.

வீட்டை ஓரளவு சீர்படுத்தவே நடுநிசி ஆகிவிட்டிருந்தது.

நாளை பெருக்கி அள்ளினால் ஒரு கூடை குப்பையும், தூசியும் தேறும்.

களைத்து சோபாவில் சுருண்டு தூங்கியிருந்தது அனு.

இத்தனை நேரம் பேச்சு, சிரிப்பால் நிரம்பியிருந்த கூடம் காலியாய் நின்றது.

காலிப் பள்ளிக்கூடம் போலொரு அமைதி.

விழா மாலை நேர கனவல்ல என்பதற்கு சாட்சி போல மலர்களின் மணம்.

அவன் தவிப்பாய் நின்றான்... நகர்ந்தான்.

"உக்காரு பரணி, பெரியம்மா கடிதத்தை நீ முழுசாய் படிக்கறது நல்லது."

"நேரமாயிடுச்சு."

"காலையில தூங்கிக்கலாம். உங்கிட்ட முழு விவரமும் சொல்லாம இனி முடியாது..."

உள்ளே போனான்.

உடம்பு சில்லிட காத்திருந்தாள்.

திரும்ப வந்து அவன் நீட்டிய கடிதத்தை வாசித்தாள்.

முழுக்க மனதில் பதியவில்லை.

புத்தி நம்ப மறுத்தது.



மீண்டும் மீண்டும் வாசிக்க வேண்டியதிருந்தது.

அதிலிருந்த விவரம் அப்படி! பெரியப்பா எழுதியிருந்தார்.

"பாஸ்கர், உன் கடிதம் எங்கள் இருவருக்குமே ஓர் இனிய ஆச்சரியம்! உன் சித்தி சுகமாய் படபடக்கிறாள்.

'இத்தனை நாள் எங்கிட்ட பயல் சொல்லவே இல்லையே... பரணியக் கூப்பிட்டு கேட்டிருவோமா...?' என்று என்னை நச்சரிக்கிறாள்.

நான்தான் அவளைச் சற்று பொறுமையாய் இருக்கச் சொல்கிறேன்.

நீ இங்கு வரும் போதெல்லாம் பரணியைச் சீண்டுவதையும், அவள் இல்லாத நேரங்களில் ஆர்வமாய் அவளைப் பற்றி விசாரிப்பதையும் நான் கவனித்ததுண்டு.

அது, அழகான பெண்ணிடம் வழியும் ஆணின் இயல்பு என்றுதான் நினைத்தேன்! கோபித்துக் கொள்ளாதே....இங்கேயே இப்படி என்றால், கூட பெரியவர்கள் யாருமற்ற சென்னையில் பயல் ஏக அமர்க்களம் செய்துகொண்டிருப்பான் என்று கூட நினைத்ததுண்டு...!

போனமுறை பரணியைப் பற்றிய பேச்சை நீ எடுத்தபோது உனக்கு சென்னையிலிருந்து அவசர அழைப்பு வந்து, நீ கிளம்பியதும்கூட இப்போது புது அர்த்தங்களுடன் நினைவிற்கு வருகிறது.

வாய்விட்டுச் சொல்வது உனக்கு சங்கோஜமாக இருந்ததோ...? எப்படியோ,

'பரணியைக் கல்யாணம் செய்துகொள்ள விரும்புகிறேன்' என்று நீ பண்பாய் எழுதிக் கேட்டிருப்பதில் சந்தோஷம்.

எங்களுக்குப் பரணி மகள் போலத்தான்.

ஆனாலும், இவ்விஷயத்தில் நாங்கள் உன் சார்பில் சம்மதம் கேட்பதைவிட- நீயே அவள் மனதை அறிவது அல்லது மனதை

மாற்றுவது சுவாராசியமாய் இருக்கும்.

பெரியவர்களின் முழு சம்மதத்தோடு மலரட்டும் உங்கள் காதல்! எங்களுக்காக, எங்கள் திருப்திக்காக பரணி சம்மதம் சொல்ல வேண்டாம். உனக்காக உன்னை நேசித்து சம்மதிக்கட்டும்! அப்படி ஆரம்பிக்கும் வாழ்வில் இனிப்பு அதிகம்- அனுபவஸ்தன் சொல்கிறேன். நான் நட்சத்திரத்தைக் கைப்பற்றினது அப்படித்தான்...! அதே வழியில்தான் என் மகள்களும் வாழ்வை அமைத்துக்கொண்டனர்.

எங்கள் சீதனமாய் பரணிக்கு முப்பது பவுன் நகைகளும், அவள் தங்கியுள்ள 'அவுட்ஹவுசு'ம், அதைச் சுற்றியுள்ள கால் ஏக்கரும் ஏற்கெனவே உண்டு.

இப்போது அவளைப் போற்றி நேசிக்கும் மாப்பிள்ளையைத் தேடிப் பிடிக்கும் வேலையும் எனக்கு மிச்சம்.

நீயும், பரணியும் கணவன்- மனைவியாய் பங்களாவில் வாழ்வதைத் தவிர வேறெது எங்களுக்கு சந்தோஷம்?"

கடிதத்தின் கடைசியில், பங்களாவை அவன் பெயருக்கு மாற்றுவது குறித்த சட்டபூர்வமான தகவல்கள்....

கடிதத்தை மடித்தாள்.

வெகு அருகேதான் நின்றாள்.

ஆனாலும், நிமிரத் திராணியில்லை.

விரல்கள் வேறு தந்தியடித்தன....

பாஸ்கர் தன்னை மணக்க விரும்பி கோரிக்கை வைத்த பின்புதான் ஐயா இந்தப் பதிலை எழுதியிருக்கிறார்...!

செய்தியில் தேனின் தித்திப்பு.

ஆனால், காய்ச்சல் கண்ட நாவில் தேன் தித்திக்குமா? அதிர்ச்சியில் மனம் மரத்திருந்தது.

"நான் உன்னை விரும்புகிறேன் பரணி... என்னைப் பார்த்தால் நம்புவது சிரமம்தான்... ஆனால், அதை வெளிப்படையாய்



உடைத்துச் சொல்ல வெகு கூச்சமாக இருந்தது... நீ உதறிடுவியோன்ற தயக்கம். ஆரம்பத்தில் இந்த ஈர்ப்பு ஏன்னு எனக்கே புரியலை. உன்னைப் பார்க்க நெருங்கறப்ப எல்லாம் மனசுல திரியிட்டு பற்ற வச்ச பரபரப்பு... சீண்டுவேன், வம்பிழுப்பேன்... நிலவறையிலே பல வருஷங்களுக்கு முன்னே நான் கேட்டது நினைப்பிருக்கா?"

குனிந்திருந்த அவள் முகம் குங்குமக் குழம்பானது.

அவள் நினைக்கக் கூசிய, மறக்க முயற்சித்தது அல்லவா அது...!

"சரியா இல்லை... பயந்து ஓடிட்டேன்..."

"'என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறியா?'ன்னு கேட்டேன். கேட்ட பிறகுதான் என் உள்மன நோக்கம் எனக்கே அர்த்தமாச்சு. அப்ப எனக்கு வயசு இருவதுதான். பிறகு வெளிநாட்டுப் படிப்பு... அம்மா இறந்ததுன்னு வாழ்க்கை என்னை புது வெள்ளமாய் இழுத்துட்டுப் போச்சு. அடிக்கடி இங்க வரமுடியலை. பல பெண்களைச் சந்திச்சேன். ஆனா, மனசு காமிரா மாதிரி. அதிலே ஆரம்பத்திலேயே நீ பதிஞ்சிட்டே. காரணம் புரியலை... ஆனா, உள்ளே உன் பிம்பன்னு புரியுது. அதுக்கு மேலே வேறெதும் பதியாதுங்கறதும் புரிஞ்சி போச்சு. உங்கிட்ட ஏதோ ஒரு வசியம்... வலையாப் போட்டு என்னை அமுக்கிடுச்சு..."

"நான்...நான் ஏதும்..."

"எதுவும் செய்யலைதான். ஆனா, கடவுள் என் வாழ்க்கை உன்னோடுதான்னு முடிச்சைப் போட்டுட்டாரே!"

"எனக்கு பயமா இருக்குது பாஸ்கர்... ரொம்ப பயமா..."

"என்னன்னு சொல்லு பரணி. வேற யாராவது உன் மனசுல.. உண்டா?"

கேட்டவனின் குரல் நடுங்கியது.

"அர்ச்சனாகிட்ட பெரும்பாலும் நான் பேசியது உன்னை

பற்றிதான். அதில் எம்மனசை யூகிச்சவ, உனக்கு மதுரையில் ஒரு காதலன் இருப்பதாயும், அவரைப் பார்க்கத்தான் நீ அடிக்கடி அங்கே போறதாயும் சொல்ல... நானும் ரொம்பவே பயந்துட்டேன். அதனால்தான் எனக்கு உன்னில் இடமில்லைன்ற நினைப்பு என்னை உருக்க, முழுவேகமாய் வேலையில் இறங்கினேன். இல்லைன்னா அந்த ஏமாற்றத்தை என்னால் சமாளிக்கவே முடியாதே..."

"நான் மதுரைக்கு சைக்கிள் மிதித்தது என் வயிற்றுப் பாட்டிற்காய்..."

"ராணி சொன்னா. 'பரணி பொண்ணுக்கு சின்ன அனுவைத் தவிர யார் மேலேயும் நோக்கமில்லை. அது வாழுறதே அதுக்காகத்தான்'னு. அது ஆறுதல்னாலும் நீ சிடுசிடுப்பாகவே என்னைப் பார்த்தது, பழகினது– உன்னோடு இங்கே நான் வாழ முடியும்ன்ற நம்பிக்கையை அழிச்சிடுச்சு..."

பரணிக்கு வற்றி, வாடிய அவன் தோற்றத்திற்கான காரணம் புரிந்தாலும்– பணம், பவிசு, பார்வைக்குப் பாந்தமான ஒருவன் தனக்காய் ஏன் ஏங்கினான் என்பது புரியவில்லை!

"ம்ஹூம்... பணம். பணந்தான் நமக்கிடையே பெரிய பள்ளம்... என்னால அதைத் தாண்ட முடியாது."

பதற்றம் குறைந்த பாஸ்கர், அவள் மோவாயை விரல்கொண்டு நிமிர்த்தினான்.

தீ போன்ற தீண்டல்– வெம்மையான சுகம்...

அவள் கண்களில் சொன்னது போல பயமிருந்தது... அதைவிட வருத்தம் அதிகமிருந்ததே...!

எதனால் வருத்தம்...?

தங்களுக்கு இடையே இருந்த இடைவெளியினாலா.?

இன்னும் கன்னங்களில் நாணச் செழுமை. மிக மிருதுவாய் சொன்னான்:



"வாழ்க்கையின் வசந்தங்கள்
மனதில் அரும்ப வேண்டியவை.
பணம் கொண்டு
பயிராவதில்லை."

"கவிதை போலிருக்குது."

"எப்பவோ வாசித்த கவிதைதான். ஒத்த எண்ணங்கள்னும் போது வரிகள் மனதில் ஒன்றிப் போயிடுது. எனக்கு இருப்பதெல்லாம் இனி உன்னுதும்தான். பங்களாவின் பெயரைக்கூட மாற்ற வேணாம் பாரு."

அவள் விழிகளில் கேள்வி மின்னியது.

"பெயர் பொருத்தம் வெகு கச்சிதமாய் அமைஞ்சிருச்சே. பரணி... பரணி நட்சத்திரமில்லையா?"

"அந்தஸ்தும் அகல சுவர்தான். தாண்டறது சிரமம்... இந்த அவசர முடிவுக்கு, நீங்க பிறகு வருத்தப்படக் கூடாதில்லையா?"

"அவசர முடிவா? பத்து வருஷமாய் என்னைச் சுற்றி இறுக்கின இனம் புரியாத வலையைப் பிரிச்செடுத்து, முழுக்க புரிஞ்ச பிறகுதான் இந்தக் கடிதம் எழுதினேன். பரணி, சின்னவயசிலேயே வாழ்க்கையிலே எத்தனை அடி உனக்கு...? தைரியமாய் தாங்கி நின்ன உன் நெஞ்சுரம் பிடிச்சிருந்தது. அனுவை எல்லாமுமாய் நின்று நீ வளர்க்கிற நேர்த்தி, தன்னிலமில்லாத அன்பு, நாந்தான் முதலாளின்னதும் எங்கிட்ட வாடகையைக் கொண்டுவந்து நீட்டின நேர்மையான சுறுசுறுப்பு...!" கண்சிமிட்டினான்.

"ஆனா உங்ககிட்ட அந்த நேர்மை இல்லியே."

அடக்க முடியாமல் சொல்லிவிட்டாள்.

சிரித்த அவன் கண்கள் சினம் காட்டின.

"நேரே உன்னோடு வந்து 'டூயட்' பாடாம பெரியவங் மூலமாய் என் விருப்பம் தெரிவிச்சது கள்ளத்தனம்ங்கிறிய பரணி? வேண்டிய தனிமை இருந்தும் உங்கிட்ட அடாவடித்தன பண்ணாம, இப்படி கொஞ்சறது தப்புங்கறியா?"

"என்.... என்னை அவுட்- ஹவுசைவிட்டுக் கிளப்ப நீங்க முயற்சி செஞ்சமுறை நேர்மையாய் இல்லையே?"

"இதென்ன புதுக்கதை?"

"பேய் உலாவற மாதிரி பயங்காட்டினீங்க... நான் நடுங்கி இங்கே... பங்களாவிலேயே தங்க சம்மதிப்பேன்ற குறுக்கு யோசனை..."

அவன் முகம் மாறியது.

சிரித்தான். சந்தோஷமற்ற சிரிப்பு.

"பரணி, உனக்கு எம்மேல ரொம்ப நல்ல அபிப்ராயம் போல. ஆனா, ஏன் அதுன்னு எனக்கு முழுசா புரியலை. தூங்கலாம். விடிஞ்சப்புறம் இன்னும் தெளிவாப் பேசலாம்... இப்ப கிளம்பு..."

அனுவைத் தூக்கிக்கொண்டு நடந்தான்.

அவள் வேறு வழியின்றி அவனைத் தொடர்ந்தாள்.

வெளியே முளைத்திருந்த விளக்குகளால் வேண்டிய வெளிச்சமிருந்தது.

மழை வருவதற்கான அறிகுறியாய் குளிர்காற்று...

மரங்கள் வளைந்து ஆடின.

ஓரக் கண்ணால் மொட்டை மரத்தைப் பார்த்தாள்.

விரைந்து நடக்க முடியவில்லை.

உடலெங்கும் சோர்வு பரப்பிய ஒருகனம்.

இருவரும் மவுனமாய் நடந்ததின் இறுக்கம் வேறு.

இவளுக்கு முன்பாய் வீட்டை அடைந்தவன் காத்து நின்றான். கால்களை சற்று எட்டிப் போட்டபடி பர்ஸினுள் வீட்டு சாவிக்காகத் துழாவினாள்.

"ஷ்..." மிக மென்மையான எச்சரிப்பு.

திடுக்கிட்டுப் பார்த்தாள்.

விரலை உதட்டில் சமிக்ஞையாய் வைத்திருந்தான். குழந்தையை



மெள்ள அவள் தோளுக்கு மாற்றினான்.

இப்போதும் பரணிக்கும் அந்தச் சத்தம் கேட்டது.

வீட்டின் பின்புறச் சுவரில் ஏதோ உராய்வது போல...

அரவமின்றி காலடி வைத்து பின்பக்கமாய் போனான்.

என்ன நடக்கிறது, யார் அது?

திருடனோ?

திகில் படம் பார்ப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது. கால்கள் அசைய முடியாதபடி இரும்பாகியிருந்தன. கைகள் அனிச்சையாய் அனுவை இறுக்கின. வாய் வறண்டு இதயத்தின் துடிப்பு கேட்க ஆரம்பித்திருந்தது.

"யம்மா...!"

இரண்டாம் நிமிடம் ஒரு அலறல்- இருட்டை வெட்டிக் கிளம்பியது.

"ஐயோ... பாஸ்கர்... என்னாச்சு?" இவளும் வீட்டின் பின்புறம் ஓடினாள்.

அங்கு போதிய வெளிச்சமில்லை.

ஆனால், தரையில் மங்கிய இரு நிழல் உருவங்கள் கிடப்பதும், உருளுவதும் தெரிந்தது.

"ஐயோ... யாரு... யாரது?"

"தொம்... தொம்... தும்..." -யாரோ யாரையோ குத்தும் சத்தம் கேட்க, அலறினாள்.

"யாராவது வாங்களேன்... கடவுளே..."

விசில் சத்தம். கூடவே, காவலாளியின் காலடி ஓசை கேட்டது.

கீற்றுக் கொட்டகையே வசதி என்று வேலையிடத்திலேயே தங்கிவிட்டிருந்த இரண்டு இளவட்ட தொழிலாளிகளும் வந்துவிட்டனர்.

"வீட்டைவிட வசதியா கழிவறை எல்லாம் கட்டி வுட்டிருக்கிங்கய்யா. இங்கே இருந்தா அம்மாவோட நொச்சுமில்ல?





கலியாணமாகற வரைக்கும் ஒரு ரெண்டு வருஷம் ஐயா தயவில் நிம்மதியா இங்க கழிச்சுடறோமே?" –என்று கெஞ்சி இங்கேயே குடியேறிவிட்ட இரு இளைஞர்கள்.

"வீட்டைத் திறந்து, பின்பக்க விளக்கைப் போடு பரணி."

அவன் உத்தரவின்படியே செய்தாள். அரைகுறையாய் விழித்த அனுவைக் கட்டிலில் கிடத்தி போர்த்திவிட்டு, மறுபடி வெளியே ஓடினாள்.

"யாரு பாஸ்கர்... உங்களுக்கு என்னாச்சு?"

"குத்தினதுதான் நான்"

"யாரை?"

"மாரிமுத்து"

"இவன்... இவனா... எதுக்கு இந்நேரம் இங்கே வந்தான்?"

கீழே மாரிமுத்துவுடன் படுத்திருந்தது ஒரு ஏணி.

மெலிந்த மாரிமுத்து மேலும் பரிதாபமாய் தெரிந்தான்.

"எழுந்திருடா"

காவலாளி அதட்ட– எழுந்தவன் தள்ளாடியதன் காரணம் குடியா? அல்லது வாங்கிய அடியா? என்று தெரியவில்லை.

"இனி அடிச்சா தாங்காது" –கை குவித்தான்.

"அப்ப சொல்லு. இந்நேரம் இங்க உனக்கென்னவேலை?"

"சொல்றேன். தண்ணி..." விரல்களால் சைகை செய்தான்.

"ஏற்கெனவே போட்டிருக்கியே... பிறகென்ன?"

"ஐயா... அதைப் பாருங்க. மூங்கில் கூடை... மூடி அசையுது."

சொன்ன இளவட்டம் சுவரோரமாகக் கிடந்த கூடையின் மூடியை விலக்க– உள்ளே பளபளவென்று சுருண்டிருந்தது... ஒரு பாம்பு!

"ஐயோ... பாம்பு!"

"பரணி... உள்ளே போ. மூடுப்பா செல்வம், பெட்டிய."

சுகமாய் சுருண்டு கிடந்த சர்ப்பம் அசைந்தது. வெள்ளிச்

சரமாய் நெளிந்தது.

"நீ கொண்டு வந்ததுதானா இது?"

த்லையசைத்தான் மாரிமுத்து.

"நாஞ் சொல்றேங்கய்யா– ஏணியப் போட்டு ஏறி, அந்த மேல் சன்னல் வழியா பாம்ப உள்ளே விடப் போனாரு. ஏன்டா களவாணிப் பயலே...அதானா?" இளவட்டம் அறைந்தான்.

"ஐயா அடிக்க வேணாம்னு சொல்லுங்க..."

"நீ உங்கதைய முதல்ல சொல்லுடா"

"அதுக்குத்தான்..."

"எதுக்குடா நாயே?"

"பாம்ப வீட்டு உள்ளார விடத்தான்"

"அப்படிச் சொல்லு. ஏணி எங்க உள்ளது?"

"சமையலறை ஓரமாக் கிடந்துச்சு. ராணிய ஏமாத்திட்டு எடுத்துக்கிட்டேன்"

"அப்போ... முன்னே அந்தக் காகிதத் துண்டுகளை உள்ளே போட்டதும் நீதானா மாரிமுத்து?"

மெள்ள கேட்டாள்.

"ஆமாம்மா."

"அதென்ன பரணி?"

கேட்ட பாஸ்கரனிடம் விவரம் சொன்னாள்.

கவனமாய் கேட்டுக் கொண்டான்.

"ஏன் மாரி? எதுக்கு அப்படிச் செய்தே?"

தயங்கினான்... செருமினான்.

"நீங்க உள்ளாரப் போங்கம்மா. பெண்டை நிமுத்தினாத்தான் பய கக்குவான்."

இளைஞர்களின் ஓங்கின கைகளைப் பார்த்ததுமே மாரி கக்கிவிட்டான்.

"அர்ச்சனாம்மா சொல்லித்தான் செஞ்சேன்."



"எளவே... என்னடா சொல்லிச்சு? முளுசா சொல்லித் தொலை."

காவலாளி அதட்டினார்.

தன்னை மீறி இந்தச் சோனிப் பயல் பாம்பும், ஏணியுமாய் பரமபத தினுசில் இங்கு விளையாட நுழைந்துவிட்டானே என்ற கடுப்பு அவருக்கு!

"பரணி பொண்ணு இந்த வீட்ட காலி பண்ணனும்ங்கறது அர்ச்சனாம்மா நோக்கம். பயங்காட்டி தொரத்திடுன்னுச்சு. அது தந்த வெள்ளைச் சல்லாத் துணிய ராத்திரியில் மொட்ட மரக்கிளையில் கட்டி வச்சேன்..."

"திணைக்குமா?"

"இல்லைல்ல... ஒரு நாளுதான்... சன்னலைத் தட்டி முழிப்பு வரச் செஞ்சேன். சன்னலு வழியே பரணிம்மா பாத்தாங்க... பிறகு ஒரு நாளு இதே போல ஏணியில ஏறி, காகிதத் துண்டுகளை போட்டேன்..."

"வெறும் காகிதமா?"

"இல்ல. அர்ச்சனாம்மா கிழிச்சு அதுல ஏதோ எழுதித் தந்தாங்க. அதைத்தான் போட்டேன். காகிதத்தை குழலாகச் சுத்தி 'மைக்'காட்டம் பிடிச்சுகிட்டு– 'போ... போயிடு... பரணி நச்சத்திரா' அப்படி இப்படின்னு குரல் கொடுத்தேன். பரணி பொண்ணு அசரலை. இன்னைக்குங் கூப்பிட்டு அர்ச்சனாம்மா 'என்னடா மாரி... என்ன செய்றே?'ன்னு. சத்தம் போட்டுச்சு. அது தர்ற ஐநூறு ரூவா காசுக்கு உயிரயா எடுக்க முடியும்? வீட்டுக்கு வரச் சொல்லி இரண்டாயிரம் ரூவா தந்தாங்க... கூடவே இந்தப் பெட்டியும்..."

"உள்ளார பாம்புன்னு தெரியுமில்ல?"

"தெரியும்– வாய் தச்ச பாம்புன்னுச்சு..."

"பயங்கர 'கிரிமினல்' புத்தி அந்த அர்ச்சனாவுக்கு. பாம்பு எப்படி கிடைச்சுதாம்?"

"நேத்து அவங்க மில்லுல புதருங்களை வெட்டினாங்களா ஐயா. அதுல அடைஞ்சி கிடந்த பாம்புகளைப் புடிக்க இன்னிக்கு பிடாரன் வந்தானாம். அவன் தந்த பாம்பு..."

"கடவுளே...! மாரியை 'ஷெட்'ல வைங்கப்பா– அடிக்க வேணாம். நாளைக் காலையில போலீஸ் ஸ்டேஷ போகணும்..."

"ஐயா... ஐயா... வேணாங்க, வுட்டிருங்க. நாலு பேருக்கு தெரிஞ்சா அசிங்கமாப் போகும்..."

"நாலு பேருக்குத் தெரிஞ்சவனாடா நாயி நீ? நாப்பது பேருக்குத் தெரிஞ்ச அந்த அம்மணி பேரு நாறுறதுக்குத்தா புகார் தர்றது. உங்கழுத்துல இந்தப் பாம்பச் சுத்திவிட்டு நாளைக்கு பரமசிவக் கோலத்துல ஊர்வலமாப் போறோ ஸ்டேஷனுக்கு..."

நெட்டித் தள்ளியபடி போனார் காவலாளி.

பரணிக்கு கண்களை இருட்டியது.

வீட்டினுள் இத்தனை நீளசர்ப்பம் 'சொத்'தென விழுந்துபில் நெளிந்து நடமாடியிருந்தால்...? ஐயோ... உடல் உதறியது தனிமையில் அலறி உயிரே போயிருக்கும். அது தீண்டா விட்டாலும் கூட!

வாய் கட்டிய நாகத்தையா அர்ச்சனா அனுப்பியிருப்பாள்?

ஒருவேளை குழந்தைக்கு ஏதும் நேர்ந்திருந்தால்...

தலைச் சுற்றியது. நிற்க முடியவில்லை.

பாஸ்கரன் அவளைத் தூக்கிக் கட்டிலில் கிடத்தியது சிறுபிள்ளை போல தனது தோளில் சாய்த்து வைத்து சூடான பாலை பருகச் செய்தது... அத்தனையும் கனவான மசமசப்பில்...

மறுநாள் கண்விழித்த நேரம். அவன் இன்னும் அருகேதான் இருந்தான். ஆனால், நாற்காலியில் சரிந்த... ஆழ்ந்த உறக்கத்தில்!

மெல்ல எழுந்து முகம் கழுவப் போனாள்.

'குப்'பென்று நேற்றைய இரவின் நினைவுகள் மறுபடி லைதூக்கின.



கீழே பாம்பு ஊர்கிறதோ என்று அச்சமாய் பார்த்துக் கொண்டாள். இன்னும் அதே சேலை– ரவிக்கையில்தான் இருந்தாள். மாற்றலாமா என்று யோசிக்கையில் அவன் குரல்...

"எப்படி இருக்கே பரணி?" இதமாய் விசாரித்தது.

"ம்ம்... இப்ப ஒண்ணுமில்லை. எல்லாம் ஏதோ கெட்ட கனவு போல..."

"நானுமா? எங்காதலும்கூட கெட்ட கனாத்தானா?"

ஓரிரவின் தாடியும், தூக்கக் 'கண்களுமாய் நின்றவனை முழுதாய் பார்த்தாள். தனக்காய் உறக்கம் கெடுத்துக்கொண்டு இவன் ஏன் இங்கே அல்லாட வேணும்?

அவன் விழிகளில் அதற்கான பதிலிருந்தது.

'காதல் பெண்ணே... காதல்!' என்றன அவை.

வெட்கமின்றி காந்தமாய் ஈர்த்தது பார்வை.

நெருங்கினாள்.

"ம்ஹூம்..."

"அப்படின்னா?"

"அது கெட்ட கனவில்லை... சந்தோஷமான நிஜம். அப்படித்தானே?"

"அப்படியேதான்" என்றவளை இழுத்து– இறுக அணைத்துக் கொண்டான்.

இருவர் கண்களிலும் நீர்... விவரிக்கவொண்ணா மகிழ்வில் தெறித்த நீர்... நட்சத்திரங்களாய்!

**(முடிந்தது)**

ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: ர. பாஸ்கரன், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. அச்சிட்டவர்: சி. கல்யாண சுந்தரம், ராணி அச்சகம், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.